Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


Admission open
No Prior Qualifications
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only
founation level Course fee
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/940)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (16.09.2011) பக்கங்கள் 16 ஓசை - 352



முடங்கிக் கிடக்கும் சைக்கிள்கள்

04




பொய் சொன்னால் பிடிக்கும்

11



உதவக் கோரிக்கை

13



அடி வாங்குவதே இலட்சியம்

12

## பொன்சேகா வழக்கு வருட இறுதியில் தீர்ப்பு

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை நேற்று நிறைவடைந்தது. வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் டிசம்பர் 15 வெளியிடப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிராக அல்ல, இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை மாற்றுமாறு கோரியே நீதிமன்றத்திடம் வலியுறுத்தியதாக பொன்சேகா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா குறிப்பிட்டார். பொன்சேகா எந்தவகையில் குற்றவாளி என்பதை இராணுவ நீதிமன்றம் தெளிவுபடுத்தவில்லை என அவர் தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தமது எழுத்து மூலமான விளக்கங்களை வழங்குவதற்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

## நிலையான சமாதானத்தை ஏற்படுத்துங்கள் ஆதரவு தொடரும் என்கிறார் பிரி. தூதுவர்



(கொழும்பு)

இலங்கையில் இன முரண்பாட்டுக்கும் யுத்தத்துக்குமான காரணம் என்ன என்று கண்டறிந்து அதனை நிவர்த்திசெய்து நிரந்தர சமாதானத்துக்கு வழியேற்படுத்த இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டது தொடர்பில் பிரித்தானியாவுக்கு எதுவித மன வருத்தமும் இல்லை எனவும் ஜோன் ரான்கின் தெரிவித்துள்ளார். மின்னஞ்சல் மூலமாகவும் சமூக வலைத்தளங்களின் ஊடாகவும் பொதுமக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்து உயர்ஸ்தானிகராலயத்தால் வெளியிடப்பட்ட காணொளியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், பிரித்தானியாவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கபடநோக்கில் செய்யும் அவதூறு பிளேக்கின் கூற்றுக்கு கண்டனம்

## பிளேக் தெரிவித்த கருத்துக்களைக் கண்டித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தொடர்பாக அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் கொழும்பு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களை அக்கட்சி மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் ஊடக அறிக்கை ஒன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று வெளியிட்டது. அதன் விபரம் வருமாறு,

நாம் தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரம் பெற்ற பொறுப்பு வாய்ந்த ஒரு அரசியல் கட்சியே தவிர வன்முறை நோய் கொண்டு அலையும் துணை இராணுவக்குழு அல்ல. இந்த உண்மையை தனது வழமையான கபட நோக்கத்தோடு எம்மீது அவதூறு பரப்பும் வகையில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டு வரும் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவி செயலர் றொபேட் ஓ பிளேக் அவர்கள் உணர வேண்டும்.

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவி செயலர் றொபேட் ஓ பிளேக் அவர்கள் வழமைபோல் திட்டமிட்ட உள்நோக்கத்தோடு எம்மீதான ஆதாரமற்ற சில குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். நாம் துணை இராணுவக்குழு என்றும், ஆயுதங்களோடு நடமாடுவதாகவும் தெரிவித்திருந்த அவர் நாம் வைத்திருப்பதாக அவர் கூறும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார். இது தவிர யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எமக்கும் இடையில் முரண்பாடுகளை திட்டமிட்டு தோற்றுவிக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களை தான் சந்திக்கவிருந்ததாக பொய்யுரைத்து, தமது சந்திப்பை நாமே தடுத்து நிறுத்தியிருந்ததாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் பேச்சு மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசிற்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் இன்று ஆரம்பமாகின்றன.

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே முன்வைத்திருந்தது.

அரசாங்கத்துடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர், இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொஸ்கோ மாணவி நிதூஷிகா முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நேற்று வெளியான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகளில் யாழ். மாவட்டத்தில் டொன் பொஸ்கோ வித்தியாலயம் முன்னிலையில் திகழ்கின்றது. இப்பாடசாலை மாணவி ர.நிதூஷிகா மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளை (192) பெற்றுள்ளார். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவன் லோ.டிலோஷன் 191 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இப்பரீட்சையின் முடிவுகள் இன்று உத்தியோகபூர்வமாக பாடசாலைகளுக்கு கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். டொன் பொஸ்கோ (15 ஆம் பக்கம் பார்க்க)





## றொபேட் ஓ பிளேக் அரசுக்குப் பாராட்டு

இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து றொபேட் ஓ பிளேக் பாராட்டுத் தெரிவித்ததாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிளேக் என்ன கூறுகின்றார் என்று ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில்,

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில், தான் இலங்கையை விட்டு சென்றபோது காணப்பட்ட நிலைமையைவிட தற்போது நாட்டின் நிலைமை மிகவும் முன்னேற்றகரமாக மாறியுள்ளது. இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 8 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு இதுவே தருணம்

### சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நா. சபையை வலியுறுத்துகின்றன

(ஜெனிவா)

இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரின் போது 40,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை போர்க்குற்றம் என்று அறிக்கை கூறுகின்றமையால் அது குறித்து முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைக்கு மனித உரிமை பேரவை உடனடியாக உத்தரவிட வேண்டும். அதைவிடக் குறைந்த எந்தவொரு (15 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் சுகாதார மேம்பாடு மலசலகூடங்கள் அமைக்க ஏற்பாடு

## செஞ்சிலுவை சம்மேளனம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம் (I.F.R.C) பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 212 நிரந்தர மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனச் சங்கத்தின் பிரதிநிதிகள் இத்திட்டம் குறித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கும் 12 பாடசாலைகளிலும் 200 வீடுகளிலும் இந் நிரந்தர மலசல கூடங்களை



அமைத்துக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருட காலத்திற்குள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள இம் மலசல கூடங்களுக்கான நிதியினை சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்க சம்மேளனம் வழங்கவுள்ளதுடன், நேரடியாக அவ்வமைப்பு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இத்திட்டம் தொடர்பான ஏனைய சில நடவடிக்கைகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினர் பங்களிப்பு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## துவிச்சக்கர வண்டிகள் மாணவர்களுக்கு அன்பளிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த 25 வறிய மாணவர்களுக்கு தண்ணீரூற்று ஸ்ரீ சத்திய சாயி சேவை நிலையத்தினர் இலவசமாக துவிச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயம், வற்றாப்பளை மகாவித்தியாலயம், குமுழமுனை மகாவித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளில் இருந்து தலா ஐந்து மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. இத் துவிச்சக்கர வண்டிகள், நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தண்ணீரூற்று ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய உப தலைவர் க.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் வழங்கப்படவுள்ளன. (04)

## குடிசன மதிப்பீடு இறுதிக் கட்டம் விரைவில்

(யாழ்ப்பாணம்)

10 வருடங்களுக்கு ஒரு முறை நாடளாவிய ரீதியில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் யாழ்.மாவட்டத்தில் 30 வருடங்களின் பின்னர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளிவிபரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போது மேற்கொள்ளப்படும் இந்தக் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதல் இரண்டு கட்டப் பணிகள் யாழ்.மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளதுடன், மூன்றாம் மற்றும் இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இறுதிக்கட்ட கணக்கெடுப்பின் போது வீட்டிலுள்ள குடும்பத்தவர்களின் விபரங்கள் பதியப்படவுள்ளன


பனை அபிவிருத்திச் சபை

PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

விலைமனுக் கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் மாமுனை மற்றும் புளியங்குளம் பனந்தோட்டக் காணிகள் துப்பரவாக்கம் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 23.09.2011 இற்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. (C/575)


## வவுனியா வடக்கில் புகழ்நிலா முன்னணி

நேற்று வெளியாகிய புலமைப் பரீட்சை பெறுபேற்றுக்கமைய வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள கனகராயன் குள மகாவித்தியாலய மாணவி அதிக புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

வவுனியா வடக்கு, கனகராயன் குள மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த குகனேசராசா புகழ்நிலா 178 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் 32ஆவது இடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இதுவே வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இப்பாடசாலையைச் சேர்ந்த விமலேந்திரராசா மதுசாலினி 159 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

வவுனியா மாவட்டத்துக்கு நேற்று வெளியான புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளியாக 150 புள்ளி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.(12)

## நடைபாதை வியாபாரிக்கு யாழ்.நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முனீஸ்வரன் வீதிப்பகுதியில் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர்களுக்கு எதிராக பொலிஸாரால் தொடுக்கப்பட்ட வழக்கில் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## வீதிக்கு புதிய பெயர்

வலி.கிழக்குப் பிரதேசசபையின் அச்சுவேலி உப அலுவலக எல்லைப்பிரிவில் உள்ள பத்தமேனி விநாயகர் வீதியை செல்ல முத்து வீதி என பெயர் மாற்றித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியின் பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம் என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் அறிவித்துள்ளார். (வி)

## விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 6 தொடக்கம் 11 வரையான சைவநெறி பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுக் கூட்டம் நாளை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நல்லூர் சி.சி.அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது அமர்வாக தரம் 6 தொடக்கம் 11 வரையான அழகியல் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.வலய ஆசிரியர் வளாக நிலையத்தில் (யாழ். இந்து மகளிர் கல்லூரியில்) நடைபெறவுள்ளது.

மூன்றாவது அமர்வாக, தரம் 6 தொடக்கம் 11 வரையான தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

எனவே, கலந்துகொள்ளும் ஆசிரியர்கள், கைநூல் மற்றும் பாடநூல்களைக் கொண்டு வருமாறு அந்தந்த வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (03)

## புதிய நிர்வாகம் தெரிவு

ஊர்காவற்துறை பருத்தியடைப்பு சிறீ கதிரேசன் ஆலய விசேட பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் சிறி மோகன் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட விசேட பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தொடர்ந்து நிகழ்வின் சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் வேறுபட்டு நின்ற இரு தரப்பினரை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்ட ஆலய நிர்வாகத்தை புரிந்துணர்வுடனும ஒற்றுமையுடனும் செயற்படுத்த வேண்டிய அவசியம் தொடர்பான கருத்துக்களை அவர் மக்களுடன் பகிர்ந்து கொண்டார்.

## அத்தியார் இந்துக் கல்லூரி நிறுவுனர் தினமும், பரிசு நாளும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் எதிர்வரும் 22.09.2011 வியாழன் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.குகதாஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசனும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழையமாணவனும் அமெரிக்காவில் பொறியியலாளராகப் பணியாற்றுபவருமாகிய த.சதீஸ் கலந்து கொள்வார். நிறுவுநர் நினைவுப் பேருரையைக் கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு நிலை அதிபருமாகிய க.சி. பகவத்சிங்கம் வழங்குவார். நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி கோமதி குகதாஸ் பரிசில்களை வழங்குவார்.

## தொலைத் தொடர்புக் கம்பிகள் போக்குவரத்துக்கு இடையூறு

தொலைத்தொடர்பு கேபிள்கள் சரியான முறையில் பொருத்தப்படாததால் அவை வீதியில் பயணிப்போருக்குப் பெரும் இடையூறு ஏற்படுத்துகின்றன. யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் உள்ள கேபிள்கள் மிகவும் பதிவாக உள்ளது. இதனால், வீதியோரமாகச் செல்பவர்களின் தலையில் அவை மோதக்கூடிய அபாயநிலை உள்ளது.

இரவு நேரங்களில் இவ்வாறு செல்பவர்கள் பெரிதும் சிரமத்தின் மத்தியில் சென்று வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வீதியில் மட்டுமன்றி ஏனைய பல வீதிகளிலும் இவ்வாறான நிலை காணப்படுகின்றது. எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து மக்களின் சீரான போக்குவரத்திற்கு உதவ வேண்டும் என பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (54)

## இளைஞர் காயம்

மதுபோதையில் நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மதியம் 2.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சங்கானைப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி பாலசிங்கம் (வயது-37) என்ற இளைஞர் தலையில் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## மொழிபெயர்ப்பாளர் இன்மையால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தகுந்த நேரங்களில் இன்மையால் தாம் பெரும் அசௌகரிங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், போன்ற பிரதான பொலிஸ் நிலையங்களில் இத்தகைய குறைபாடு நிலவுவதாகவும், இதனால் தங்களது முறைப்பாடுகளை உரியமுறையில் பதிவு செய்ய முடியாமல் போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாம்பிறவாத இடமோ, பேசாதமொழியோ, தோன்றாத குலமோ கிடையாது. எனவே எல்லா நாடும் நமது நாடே எல்லா மக்களும், தமது சகோதரர் என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழ வேண்டும்.

--வாரியார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மற்றவர்களைச் சகித்தல்!

நமது மரபணுக்கள் குறித்து அண்மையில் படித்த மற்றொரு செய்தி வியப்பளிப்பதாக இருக்கிறது. அதாவது, இத்தனை நாட்களாக மனிதர்களாகிய நாம் சிம்பன்ஸி குரங்குகளைப் போலிருக்கிறோம் என்று அறிவியலாளர்கள் சொல்லிவந்தனர். ஆனால் இப்போது சிம்பன்ஸியின் மரபணுத் தொகுப்பு விரைவான மாற்றங்களுக்கு உட்படுவதால் அவை மனிதனைவிட வெகுதூரம் விலகிப்போய் விட்டதாகவும், மரபணு அடிப்படையில் மனிதன் பொனோபோ குரங்கைப் போன்றவன் என்று சொல்வதே இப்போது சரியாக இருக்கும் என்கின்றனர்.

இந்த மரபணு ஆராய்ச்சி மனிதனுடைய இயல்பு குறித்த புதிய பார்வைக்கு வழிகோலியிருக்கின்றது. சிம்பன்ஸிக்களில் ஆண் குரங்குகளே வீரமிகுந்த காவல் குரங்குகளாய் இருக்கின்றன. அவை அந்நியக் குரங்குகளைக் கொலை செய்கின்றன. குழந்தைகளைக் கொல்கின்றன. அடித்துக்கொன்ற குரங்குகளைத் தின்கின்றன. வழிக்கு வராத தம் கூட்டத்தைச் சேர்ந்த குரங்குகளையும் கொல்லத் தயங்குவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் குரங்குகள் வேட்டையிலும், போரிலும் ஆவேசமாகக் களிப்படைகின்றன.

இதையெல்லாம் பார்த்துத்தான் ஆண் வீரம் மற்றும் வன்முறை மனிதனது இயல்பு என்று நியாயப்படுத்திக்கொண்டிருக்க முடிந்தது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதே அறிவியல் உண்மையாகவும், அரசியல் நடைமுறையாகவும் கருதிவருகின்றோம்.

ஆனால், கால ஓட்டத்தில் நம் அறவுணர்வுகளும், விழுமியங்களும் மாறியதை அடுத்து பெண் முதன்மை கொண்டவையாகவும், சேர்ந்தியங்கும் பண்புள்ள பொனோபோக்கள் நம்மைப்போன்ற இனமாக அடையாளம் காணப்படுகின்றது. அறவுணர்வு அல்லது நடத்தையின் அடிப்படையில் நம் மூதாதையரைத் தீர்மானிப்பதானால் போனோபோக்கள் கூடுதல் தகுதி பெறுகின்றன.

உலகில் உள்ள பண்பாடுகளில் பல பண்பாடுகள் மனிதனை மனிதன் தின்பதை அங்கீகரிக்கின்றன. பல தார மணம் செய்வதை ஊக்குவிக்கின்றன. வேற்றுக் குழுவினரின் தலைகளைக் கொய்வதை விளையாட்டுப் போல செய்கின்றன. சித்திரவதை காலங்காலமாக மனிதனால் கையாளப்படுகின்றது. சீனாவில் சில குழுப் பெண்களின் கால்கள் இறுகக் கட்டிவைக்கப்பட்டு ஊனமாக்கப்படும் வழக்கம் இருக்கிறது. சிசுக்கொலை, பாலியல் உறுப்புக்கள் சிதைக்கப்படுதல், அடிமைமுறை இவையெல்லாம்கூட இன்னும் ஆங்காங்கே தொடர்கிறது.

அறிவியலின் பயன்கள் அனைவருக்கும் உரியனவாக இல்லை. வறுமை நிலையில் வாழ்பவர்களை அலட்சியப்படுத்தி வளங்கள் ஒரு சிலரால் மட்டுமே ஆண்டனுபவிக்கப்படுவதை நியாயப்படுத்தும் பொருளாதாரக் கோட்பாடுகளே கோலோச்சுகின்றன. இந்த ஏற்றத் தாழ்வை ஏற்று வாழ்பவர்கள் கல்வி அறிவற்ற காட்டுமிராண்டிகள் அல்ல – படித்தவர்களும், உயர் பண்பாட்டின் நாகரீக வளர்ச்சியின் உச்சியில் இருப்பவர்களே.

அறிவும், பண்பாட்டு வளர்ச்சியும் மனிதனின் அறவுணர்வை வளர்க்கவில்லை என்றே தெரிகின்றது. தர்க்க அறிவை, அறக்கேடுகளையும் நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்துபவனாகவே மனிதன் இருக்கின்றான். “நம்மிடம் விலங்குணர்வுகள் உண்டு. அவையே மேலோங்கிய ஆற்றல் கொண்டவை. அவற்றுக்கு திசையறிவிக்கும் பணியையே அறிவு செய்கிறது” என்கிறார் ஜோனதன் ஹெய்ட் என்ற ஆய்வாளர். நம் அறிவானது அறம் குறித்து எழும் உணர்ச்சிகளுக்கு நியாயப்படுத்தலை மட்டுமே செய்கின்றது என்கிறார் அவர்.

நியாயமாக நடக்கவேண்டும், அனைவருக்கும் சம உரிமை வேண்டும், நமக்குக் கிடைத்த நன்மைகள் பிறருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், யாருக்கும் தீமை செய்யக்கூடாது போன்ற விழுமியங்கள் விலங்குகளிடமும் இருக்கின்றன என்கிறார் ஹெயிட். இவை அறிவால் தீர்மானிக்கப்படுபவை அல்ல. உணர்வுகளின் எழுச்சியாக அமைபவை. அறிவு அவற்றைத் தர்க்க ரீதியாக நியாயப்படுத்துவது எல்லாம் பிற்சேர்க்கைதான்.

இன்று நாம் பல பண்பாடுகளாய்ப் பிரிந்து நிற்கின்றோம். இதில் ஒரு பண்பாடு தன்னை முற்போக்கு என்று சொல்வதும், இன்னொரு பண்பாட்டைப் பிற்போக்காகச் சொல்லி விலக்குவதும் திருத்த நினைப்பதும் பெரும் பிழையாகவே இருக்கும்.

மற்றையவற்றை ஏற்கின்ற, சகிக்கின்ற பன்மைத்துவ வாழ்வை நோக்கிச் செல்லும் மனிதன் சிம்பன்ஸியிடம் இருந்தல்ல பொனோபோக்களிடம் இருந்து வருகின்றான் என்பதே சரியாகும் என்கிறது இன்றைய அறிவியல்.

- ஆசிரியர்

# ஆங்கில ஆசிரியர் பயிற்சித் திட்டம் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

ஆங்கில ஆசிரிய பயிற்சித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக் கிடையே கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவும் இந்திய அரசாங்கத்தின் சார்பில் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி ஆலோசகரும் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான செயலணியின் ஒருங்கிணைப்பாளருமான சுனிமல் பெர்ணான்டோ மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர, இலங்கை வெளியுறவு மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் ஆசிரியர்களும் இலங்கையின் ஒன்பது மாகாணங்களின் உத்தியோகத்தர்களும் ஹைதராபாத்திலுள்ள ஆங்கில மற்றும் பிறநாட்டு மொழிகள் பல்கலைக்கழகத்தின் அங்கத்தவர்களும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கையில் ஆங்கிலப் பயிற்சியை விரிவாக்குவதற்கான இந்திய இலங்கை



செயற்றிட்டம் எனும் திட்டம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அமுல்படுத்தப்படும். இச்செயற்றிட்டத்தின் அமுலாக்கலுக்காக ஹைதராபாத் வெளிநாட்டு மொழிகள் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப சேவையைப் பெற்றுக்கொள்ளும். இத்திட்டங்களின் கீழ் 40 இலங்கை ஆசிரியர்களுக்கு இந்திய அரசாங்கம் பயிற்சியை வழங்கும்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் ஒவ்வொன்றிலும் 30 பிரிவுகள் வீதம் ஆங்கில மொழிப் பயிற்சிக்கான இலங்கை - இந்திய நிலையங்களில் மொழி ஆய்வு கூடங்களை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றையும் நிபுணர்களையும் வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# உவர்நீர்த் தடுப்பணை வேலைகள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியின் உவர்நீர்த் தடுப்பரண் அமைக்கும் பணிகள் ஒப்பந்தகாரருக்கு நிதி வழங்களில் ஏற்பட்டிருக்கும் காலதாமதத்தினால் தடைப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே குறித்த பகுதியின் உவர் நீர்த்தடுப்பரண் புனரமைக்கப்படும் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதில் சுமார் ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்ட வேலைகள் முடிவடைந்திருந்த போதும் மிகுதி வேலைகள் அத்திட்டத்திற்கான ஒப்பந்தகளுக்கு நிதி வழங்களில் ஏற்பட்டிருக்கும் காலதாமதத்தால் தடைப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் மாதங்களில் பருவமழைப்பொழிவு ஏற்படவுள்ள நிலையில் குறித்த உவர் நீர்த்தடுப்பரண் வேலைகள் முடிக்கப்படாமையினால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப் படக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த உவர் நீர்த்தடுப்பணையின் மூன்றுக்கு மேற்பட்ட துருசுகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மண்டைதீவுப்பகுதியில் இம்முறை சுமார் 150 ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கை மேறகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதற்கென அப்பகுதியின் நீர் விநியோக வடிகால்கள் செப்பனிடும் நடவடிக்கையும் அப்பகுதி விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலிற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல். ஜி.ஏ.சந்திரசிறி உட்பட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மேலதிக கல்வி பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எஸ்)

## மணிவிழாக் காணும் முள்ளியவளை வித்தியானந்தா

(கொழும்பு)

முல்லைத்தீவு,மாவட்டத்திலுள்ள முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 21 ஆம 22 ஆம் திகதிகளில் மணி விழா நிகழ்வுகள் கல்லூரி அதிபர் .ரி.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதனைமுன்னிட்டு பாடசாலை மாணவர்களின் ஆக்கத்தில் உருவான பாடவிதானத்துடன் கூடியதான பொருட்கண் காட்சியும் வெளியார் நிறுவனங்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பொருட்கண் காட்சியும் இரு தினங்களும் நடைபெறவுள்ளன.

அத்துடன், புதிய நூலகத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுமதில் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன பழைய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

# டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் 118 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தமையால் கடந்த மாதத்தில் மாத்திரம் இரண்டு இறப்புகள் ஏற்பட்டதையடுத்து இந்த வாரகாலப் பகுதியை (05.09.2011 - 11.09.2011) விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பதினொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் துரிதப்படுத்தப்பட்டது.

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தினுள் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளையும் சேர்ந்த 629 கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமாக பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதுடன் 334 இடங்களில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 239 இடங்களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. 672 டிராக்டர் லோட் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

19068 வீடுகளும், 438 பாடசாலைகளும்,1005 வர்த்தக நிலையங்களும்,365 அரச, அரச சார்பற்ற அலுவலகங்களும்,167 சந்தை வடிகால்களும்,567 வணக்கஸ்தலங்களும், 603 பராமரிப்பற்ற காணிகளும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 4075 வீடுகளிலும், 126 பாடசாலைகளிலும், 247 வர்த்தக நிலையங்களிலும், 83 அரச, அரச சார்பற்ற அலுவலகங்களிலும், 49 சந்தை வடிகால்களிலும், 192 வணக்கஸ்தலங்களிலும், 286 பராமரிப்பற்ற காணிகளிலும் டெங்கு நுளம்புகள் பெருக்கமடையக்கூடிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சங்கானை, நல்லூர், தெல்லிப்பளை, உடுவில், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, யாழ் மாநகரசபை பகுதிகளில் 314 இடங்களில் எச்சரிக்கைக்கான சிவப்பு நிற ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன், சங்கானை, நல்லூர், தெல்லிப்பளை, உடுவில், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, ஊர்காவறதுறை, யாழ் மாநகரசபை ஆகிய இடங்களில் 118 பேருக்கு வழக்குத் தொடர்வதற்கான முன்னறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

05.09.2011 ஆம் திகதி முதல் 11.09.2011 வரையான காலப் பகுதிக்குரிய தொற்றுநோய் அறிக்கையின் பிரகாரம் 6 டெங்கு நோயாளிகள் புதிதாக இனங்காணப்பட்டனர். தற்போது டெங்கு நோய் பரவிவருவதால் காய்ச்சல் நோயாளர்கள் நேரகாலத்துடன் தகுதியான வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வதன் மூலம் அநியாயமான உயிரிழப்புகளை தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் வைத்திய சுகாதாரப் பணிமனையினர் அறிவித்துள்ளார்.



கடந்த காலத்தில் யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த கொழும்புத்துறை, எழிலூர் புனித வேளாங்கண்ணி மாதா ஆலயம் 16 வருடங்களின் பின்னர் தனிநபர் ஒருவரின் உதவியினால் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த 4ஆம் திகதி யாழ். மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை அருட்திரு சகாயநாயகம் அடிகளாரினால் திறந்து வைக்கப்படுவதையும், திருவிழாத் திருப்பலி நடைபெறுவதையும் அன்னையின் திருச்சொரூபப் பவனியையும் காணலாம். (21)

# புலம் பெயர்ந்த வாக்காளர்களை பதிவு செய்யுமாறு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்று வசிக்கும் புலம்பெயர்ந்தோரை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள விசேட படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச கிராமசேவை அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர் இடாப்பு 2011இல் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்வோர் மற்றும் வெளிநாடுகளுக்கு புலம்யெர்ந்து சென்றுள்ளோரைப் பதிவு செய்வதற்கு விசேட படிவம் ஒன்று கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பழைய நடைமுறைகளின்படி இடம்பெயர்ந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை

இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களை வாக்காளர் இடாப்பு 2011இல் இணைத்துக்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கென விசேட படிவம் ஒன்று பயன்படுத்துவதற்கென உரிய ஏற்பாடுகளை தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

இவ்விசேட படிவத்தைப் பூரணப்படுத்திக் கொடுப்பதன் மூலம் இடம்பெயர்ந்தோர் மற்றும் புலம் பெயர்ந்தோர் தமது பெயர்களை 2011 வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## அரியாலைப் பகுதியில் படையினர் தீவிர ரோந்து

(அரியாலை)

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வீதி ரோந்துப் பணியை இராணுவத்தினர் அரியாலை, கல்வியங்காடு நல்லூர்ப் பகுதியில் அதிகப்படுத்தி இருப்பதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.அரியாலையில் கனகரத்தினம் வீதி,புனித பெனடிக்ற் வீதி, நாவலர் வீதி, திருமகள் வீதி, ஆனந்த வடலிப்பகுதி வீதிகளில் இவர்கள் தமது ரோந்துப் பணிகளைப் புதிதாக ஆரம்பித்துள்ளனர்.

காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரை ரோந்துப் பணியில் ஈடுபடும் இவர்கள் தலா ஐந்து பேரைக் கொண்ட குழுக்களாக வீதி வீதியாகச் செல்வதை தாங்கள் கடந்த சில நாட்களாக அவதானித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலத்தில் நிலவும் அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து இந்த ரோந்து நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (23)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான எழுத்துப் பரீட்சை நடைபெறவுள்ளது. தீவக கல்வி வலயத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பித்தவர்களை யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவிருக்கும் எழுத்துப்பரீட்சைக்கு, எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அழைப்புக்கடிதம் மற்றும் அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும்படி வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## சமாதானத்தை ஒட்டிய நடனப்போட்டி

யாழ். சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகம் சர்வதேச சமாதான தினத்தை ஒட்டிநடத்தும் நடனப் போட்டி நாளை முற்பகல் 9.30 மணிக்கு கிளி. பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பூநகரி கோட்டப் பாடசாலைகளான இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, முழங்காவில் மகாவித்தியாலயம், நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்., வேரவில் இந்து மகா வித்தியாலயம், பூநகரி, மகா வித்தியாலயம், செல்லியதீவு ஜி.ரி.எம்.எஸ், பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியாலயம், முட்கொம்பன் ஜி.ரி.எம்.எஸ், கறுக்காய்த்தீவு மகா வித்தியாலய மாணவிகள் பங்குபற்றுவர். (68)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளையின் பிரிவுத் தலைவர்கள், செயலாளர் ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் யாழ்ப்பாணக் கிளைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாக கௌரவ செயலாளர் கு.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (70)

## அருட்தந்தைக்கு யூபிலி விழா

(யாழ்ப்பாணம்)

பாசையூர் மண்ணின் மைந்தனும், கண்டி மறைமாவட்ட மறைக்கோட்ட முதல்வருமான அருட்தந்தை நேரியோ ஏபிரகாம் அடிகளார் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆவது ஆண்டு யூபிலி விழா வரவேற்புத் திருப்பலி எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாசையூர் பங்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (21)

## நூல் வெளியீடு

(யாழ். நிருபர்)

க.இராசநாயகம் எழுதிய Queen's Englishநூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைப் பீடாதிபதி ஏ.கே. அருள்வேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஆங்கில விரிவுரையாளர் திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (10,26)

## மூன்று மாத காலமாக முடங்கிக்கிடக்கும் முந்நூறு துவிச்சக்கர வண்டிகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு வழங்குவதற்கென கொண்டுவரப்பட்ட 300 வரையான துவிச்சக்கர வண்டிகள் உரியவர்களுக்கு வழங்கப்படாமல் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பிரதேசத்தில் கடற்கரை வீதி, தாளையடி, புதுக்காடு வீதி தவிர வேறு எந்த வொரு வீதிகளிலும் பஸ்சேவை நடைபெறுவதில்லை கிராம உள் வீதிகளில் மக்கள் துவிச்சக்கர வண்டிகளிலும் கால் நடையாகவுமே பயணம் மேற்கொள்கின்றனர். முக்கியமாக இப்பிரதேசத்தில் உள்ள 1500 வரையான பாடசாலை மாணவர்கள் கால் நடையாகவே பாடசாலைகளுக்குச் சென்று திரும்புகின்றனர்.

ஆகவே இப்பிரதேசப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு வழங்குவதற்கென கொண்டுவரப்பட்டு நீண்ட காலமாக உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் துவிச்சக்கர வண்டிகளை உரியவர்களுக்கு வழங்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

## தபால் சேவையை மேம்படுத்த இரு வாகனங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் தபால் சேவையை மேம்படுத்தும் முகமாக யாழ். தபாலகத்திற்கு தபால் பொதி ஏற்றும் லொறி ஒன்றும் தீவுப பகுதிக்கு தபால் விநியோக வாகனம் ஒன்றும், தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருப்பதாக வடமாகாண அஞ்சல்மா அதிபர என். ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தென்பகுதியில் இருந்து புகையிரதம் மூலமாக எடுத்துவரப்படும் தபால் பொதிகளை வவுனியாவில் இருந்து இலகுவாக யாழ். எடுத்து வர முடிவதுடன் தீவுப் பகுதிக்கான தபால் சேவையையும் இலகுபடுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியாவிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருந்த சிறிய ரக தபால் விநியோக வாகனமொன்றை தபால் திணைக்களம் மீளப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## வறுமைக்குட்பட்ட மக்களுக்கு குறைந்தவிலையில் மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் உள்ள எம்.ஏ.ஜெயசிங்க மூக்குக்கண்ணாடி நிறுவனம் யாழ். மாநகரசபை எல்லைப்பரப்பினுள் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கண்பார்வை குறைந்த 35 வயதிற்கு மேற்பட்ட வர்களுக்கு மிகக்குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

இதற்கான கண்பரிசோதனை முகாமொன்று எதிர்வரும் 24ஆம் திகதி 10 மணிமுதல் 4மணிவரை யாழ்.மாநகர சபையின் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பரிசோதனையின் பின்னர் கண்பார்வைகுறைந்து இருப்பவர்களுக்கு 150 ரூபா செலவில் கோல்ட்பிறேம் மூக்குக்கண்ணாடி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## கிறிஸ்மனிதனை துரத்தியவர் கிணற்றில் வீழ்ந்த அவலம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ் மனிதனைத் துரத்திச் செல்லும் போது, நிலத்தோடு கிணறு கிடப்பது தெரியாமல் பாடசாலை மாணவன் ஒருவர் அதனுள் விழுந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொய்யாத் தோட்டத்தில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்-

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணிக்கு ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள வீட்டில் கிறிஸ் மனிதன் தென்பட்டதையடுத்து அப்பகுதி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அவரைத் துரத்திப் பிடிக்கச் சென்றனர்.

அந்தக் கிறிஸ் மனிதன் புதுவீதி வழியாக கொய்யாத்தோட்டத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் பின்பக்கமாக உள்ள வெளிப்பகுதி வழியாகச் சென்றான்.

துரத்திச் சென்ற இளைஞர்கள் அந்தப்பகுதி வழியாகச் சென்றபோது அவர்களுடன் வந்த பாடசாலை மாணவன் அந்தப் பகுதியில் பாழடைந்த நிலையில் நிலமட்டத்தோடு கிணறு இருப்பதைத் தெரியாமல் அதனுள் வீழ்ந்துள்ளார். பின்னர் அவர் அபாயச் சத்தம் எழுப்பியதை அடுத்து துரத்திச் சென்ற இளைஞர்கள் அவரை கிணற்றினுள் இருந்து மீட்டுள்ளனர்.

இடுப்புப் பகுதியில் காயமுற்ற நிலையில் குறிப்பிட்ட மாணவன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (21)

## காணாமற் போதல், மர்மமனிதன் பீதி

# குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர் வரவு திடீர் வீழ்ச்சி

(யாழ்.நிருபர்)


யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு திடீரென வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் காணாமற போகின்றமை மற்றும் மர்ம மனிதன் பீதி போன்ற அச்ச நிலையினால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனால் அநேகமான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்தே காணப்படுவதாக கல்வி சமூகத்தினர் தெரிவித்தனர்.

அதேபோன்றே தனியார் கல்வி நிலையங்களிலும் மாணவர்களின் வரவு மிகமிகக் குறைந்தே காணப்படுகின்றது.

இவ்வாறு பாடசாலைகளிலீ மாணவர்களின் வரவு குறைந் திருந்தாலும் கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. (வி)



சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் சோஆ நிறுவன அனுசரணையுடன் செம்பியன்பற்று வடக்கில் நடத்திய பெரியோருக்கான கலந்துரையாடலில் பங்குபற்றிய ஒரு பகுதியினரைக் காணலாம். (68)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சர்வதேச சமாதான தினத்தை முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்லும் வகையில் யாழ். சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகம் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளது. சமாதானமும் நல்லிணக்கமும் என்னும் தொனிப்பொருளில் இடம்பெறும். கருத்தரங்கில் செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலையுடன் மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் பங்குபற்றவுள்ளன. (68)

# கைவிடப்பட்ட படகுகளை ஒப்படைக்க நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் கிழக்கெல்லைக் கிராமங்களில் பொது மக்களால் கைவிடப்பட்ட தும்புக் கண்ணாடியிழைப் படகுகள் வெளியிணைப்பு, இயந்திரங்களின் ஒரு பகுதியை உரியவர்களிடம் இவ்வாரம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த கால போர் நடவடிக்கைகள், இடப்பெயர்வுகளின்போது இப்பிரதேச மக்கள் தமது படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்களை வடமராட்சிக் கிழக்குப் பிரதேச கிழக்கெல்லைக் கிராமங்களில் ஆங்காங்கு விட்டுச் சென்றிருந்தனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின் தமது படகுகளை தமக்குத் தரும்படி கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து இப்பிரதேச இராணுவத்தினர், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிராமிய கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து ஆங்காங்கே கைவிடப்பட்ட நிலையில் இருந்த 108 படகுகளையும் 2 வெளியிணைப்பு இயந்திரங்களையும் கட்டைக்காடு, ஆழியவளைக் கிராமங்களில் வைத்துள்ளனர்.

இவைகளில் 69 படகுகள், 2 வெளியிணைப்பு இயந்திரங்களின் உரிமையாளர் இனம் காணப்பட்டு உரியவர்களுக்கு இந்த வாரம் வழங்கப்படவிருப்பதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (70)

## சென்ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் வண. பிதா. பொஞ்சின் மண்டபத்தில் பாடசாலை அதிபர் பா.வின்சென்ற் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் வே.தி. செல்வரெட்ணம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு. றோய்பேடினன்ட், அமலமரித் தியாகிகள் சபையின் அமலோற்பவ அதிபர் அருட்தந்தை பே.பெ.பிலிப், கண்டி மறைமாவட்ட மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை க.நேரியோ ஏபிரகாம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

(குருநகர்)

சர்வதேச மார்க்சியகுழு ஏற்பாடு செய்துள்ள சமகால அரசியல் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இதில் மார்க்சிய தொழிற்சங்கவாதிகள் மற்றும் ஆய்வாளர்கள், அறிஞர்கள் உரையாற்றுவர். ஆர்வலர்கள் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (68)

## மாணவர்திறன் மதிப்பீடு

(யாழ்.நிருபர்)

யாழ்.வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே சைவநெறி மாணவர்திறன் மதிப்பீடு ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளது. தரம் 1, 2 மாணவர்களுக்கு நீதி நூல் மனனமும், பேச்சுப் போட்டியும் நடைபெறும். தரம் 3 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, பண்ணிசை, சகலகலா வல்லிமாலை, மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகளும் நடைபெறும். இப்போட்டி பாடசாலைமட்டத்திலும், கோட்டமட்டத்திலும் நடைபெறவுள்ளது. (10)

## வலந்தலை முத்துமாரியம்மன் பாலஸ்தாபனப் புனர் நிர்மாணம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்வதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகிறது.

மூலஸ்தானம் பழைய விமானத்தை அகற்றி 9 அடி உயரத்தில் புதிய விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிர்த்த மண்டபம், ஸ்தம்பம், சிம்மம், பலிபீடம், ஸ்தம்பமண்டபம், வசந்த மண்டபம், விநாயகர், முருகன், நவக்கிரகம் மற்றும் வைரவர் ஆலயங்கள், மணிக்கோபுரம், யாகசாலை, களஞ்சியம், அலுவலகம், வாகனசாலை, திருமஞ்சனக்கிணறு என்பவற்றைப் புதிதாக நிர்மாணிக்க எண்ணியுள்ளதாக ஆதீனகுருவும், நிர்வாகஸ்தருமான பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா தெரிவித்துள்ளார்.

வழிக்கரை அம்மனுக்கு இவை எல்லாம் அவசியமில்லை. தற்போது உள்ளவாறே கட்டப் புனரமைப்பு மாத்திரம் போதுமானதென அடியார்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (10)

## சமூக விஞ்ஞானப்போட்டி

(யாழ்.நிருபர்)

வடமாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சமூக விஞ்ஞானப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், வவுனியா தெற்கு தமிழ் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் மற்றும் கிளிநொச்சி வலயங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும், துணுக்காய், முல்லைத்தீவு, மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திற்கும், சமூகம் கொடுக்க வேண்டுமென மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (10)

# பாசையூரில் பறிக்கப்பட்ட கற்களால் நெருக்கடிக்குள்ளாகும் மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

பாசையூரில் இறங்குதுறையைப் புனரமைப்பதற்கு கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக கடற்கரைப் பகுதியில் பறிக்கப்பட்டுள்ள கற்கள் எந்தவித புனர்நிர்மாணமுமின்றி போக்குவரத்துக்கும், மீனவர்கள் வலைகளை உலரவிடுவதற்கும் பெரும் இடைஞ்சலாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்களினால் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு நிறுவனமொன்றின் உதவியுடன் பாசையூர் மீனவர்களின் நன்மை கருதி இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கு இந்தப் பாறாங்கற்கள் கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாகப் பறிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தங்களின் வலைகளை உலரவிடுவதற்கு இந்தக் கற்கள் பறிக்கப்பட்டுள்ள இடங்களையே தெரிவு செய்கின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய்பவர்கள் விபத்துக்களையும், ஆலயத்துக்கு வருபவர்கள் மைதானத்தில் வலைகள் கிடப்பதால் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் யாழ்.பிரதேச சபையினால் பொலிஸார் ஊடாக பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு வீதிகளில் வலைகளை உலரவிடவேண்டாம் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. எனினும் மீனவர்கள் வலைகளை உலரவிடுவதற்கு இடமில்லாமல் பெரும் அசௌரியங்களை எதிர்நோக்குகின்றனர். தாங்கள் வலைகளை உலரவிடும் இடங்களில் கற்கள் கிடப்பதனால் இந்தச் சிரமங்களை எதிர்கொள்வதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இறங்குதுறையை நிர்மாணம் செய்யும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் வருகை தந்து இடங்களைப் பார்வையிட்டும் சென்றுள்ளனர். எனினும் எதுவிதமான செயற்பாடுகளும் இன்றுவரையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக பங்குத்தந்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் மூலம் தொடர்ந்தும் அறிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே மீனவர்களின் நன்மை கருதி இறங்குதுறையை வெகுவிரைவில் நிர்மாணம் செய்து தரும்படி மீனவர்கள் தரப்பில் கோரிக்கை விடப்படுகிறது. (21)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்
(30.09.2011–வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 30 ஆம் நாள்.
இராகுகாலம்10.33–12.03, சுபநேரம் 6.03 –7.33,
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப 3.27 வரை
திதி: சதுர்த்தி மு.இ 10.47 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, அதிகாரப் போட்டி, நினைத்த தைச் சாதித்தல், உடல் உபாதை.

ரிஷபம்:– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, வாய்ப்பு இழத்தல், நண்பர் தொல்லை.

மிதுனம் :– பணவரவு, குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, தானதர்மம், அதிகாரப் போட்டி.

கடகம்:– குடும்பத்தில் குழப்பம், பணக்கஷ்டம், மனச் சஞ்சலம், நண்பர் விமர்சனம், வசதிக்குறைவு.

சிம்மம்:– பணவரவு, சுற்றத்தார் ஆதரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், பிணக்குத் தீரும்.

கன்னி :– குடும்பத்தில் சபலம், பணக்கஷ்டம், உடல் உபாதை, மனக்குறை, தொழில் முடக்கம்.

துலாம் :– பண வரவு, தொழில் அபிவிருத்தி, மனமகிழ்ச்சி, வெளி நாட்டு உதவி, பெரியோர் பாராட்டு.

விருச்சிகம்:– தொழில் விருத்தி, பணக்கஷ்டம், உறவினர் வருகை, வீண் அலைச்சல், எதிரியை வெல்லல்.

தனுசு:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, தொழில் அபிவிருத்தி, சகோதர பாசம்.

மகரம்:– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், தொழில் முடக்கம், நண்பர் கரைச்சல், உடம்பு உபாதை.

கும்பம் :– பணவரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, தொழிலில் லாபம், சுற்றத்தார் ஆதரவு.

மனம்:– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், உடல் உபாதை, வீண் அலைச்சல், பிணக்குத் தீர்தல்.

# தேசிய மட்டப் போட்டிகளின் 2ஆம் கட்டம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகளின் இரண்டாம் கட்டம் நாளைமுதல் ஆரம்பமாகவுள்ளன. இதில்,

**கரப்பந்து**

17, 18, 19 ஆம் திகதிகளில் சீதுவை தரிசமர வித்தியாலயம், சீதுவை நகர சபை மைதானம்.

**ஹொக்கி**

17, 18, 19 ஆம் திகதிகளில் ராஜகிரிய வித்தியாலயம் கொழும்பு -07, சாலிய விளையாட்டரங்கு நாரஹேன்பிட்டி, சாந்த பீற்றர் வித்தியாலயம் கொழும்பு -04.

**மென்பந்துத் துடுப்பாட்டம்**

17, 18, 19, 20 ஆம் திகதிகளில் பாணாந்துறை மக்கள் விளையாட்டரங்கு, பாதுவ மத்திய விளையாட்டரங்கு, பாணாந் துறை சாந்தக்கோன் வித்தியாலயம்.

**ஜிம்னாஸ்ரிக்**

17, 18, 19 ஆம் திகதிகளில் சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கு.

**அரபிக்ஸ்**

17, 18, 19 ஆம் திகதிகளில் சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கு.

**கூடைப்பந்தாட்டம்**

17, 18, 19ஆம் திகதிகளில் ராஜகிரிய வித்தியாலயம் கொழும்பு, சாந்த பீற்றர் வித்தியாலயம் கொழும்பு, சாந்த ஜோசப் பாலிய வித்தியாலயம் நுகேகொட, சிறிமாவோ பண்டாரநாயக்கா வித்தியால யம் கொழும்பு.

**மேசைப்பந்தாட்டம்**

17, 18 ஆம் திகதிகளில் கல்கிஸை அத்துலத்முதலி வித்தியாலயம்.

**பூப்பந்தாட்டம்**

17, 18 ஆம் திகதிகளில் கல்கிஸை சாந்த தோமஸ் வித்தியாலயம்.

**ரென்னிஸ்**

17, 18 ஆம் திகதிகளில் ரென்னிஸ் சங்க மத்திய நிலையம் கொழும்பு.

**கராத்தே**


17, 18, 19ஆம் திகதிகளில் கிரிபத் கொட விகாரமாதேவி பாலிக வித்தி யாலயம்.

**மல்யுத்தம்**

17, 18, 19 ஆம் திகதிகளில் பாணாந்துறை சிறிசுமங்கள வித்தியாலயம்.

**சைக்கிளோட்டம்**

18 ஆம் திகதி கொழும்பு விகாரமா தேவி சுற்று வட்டம். மூன்றாம் கட்டப் போட்டிகள் 30, 1, 2, 3 ஆகிய திகதிகளில் மெய்வல்லுநர் போட்டிகள் பியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.



மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில், வவுனியா வடக்கு சாந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதில் பங்கு பற்றிய மாணவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியருடன் நிற்பதைக் காணலாம்.

## மாணவரின் விளையாட்டுத்திறனை மேம்படுத்துவதற்குத் திட்டம்

(கொழும்பு)


மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத்துறை ஆற்றலை வெளிக்கொண்டு வரும் வகையில் அகில இலங்கை கல்வி வலயங்களுக்கிடையே குறிப்பிட்ட போட்டிகளுக்கான பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பட்டு மாணவர்களின் திறன்கள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டுமென கல்வியமைச்சால் பணிக்கப்பட்டுள்ளது.

இதனொரு கட்டமாக வடமாகாண கல்வியமைச்சினால் உடற்கல்வி ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆறு விளையாட்டுக்கள் தெரிவுசெய்யப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. மெய்வன்மை கால்பந்தாட்டம், றக்பீ, ஜிம்னாஸ்ரிக், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்

# யாழ்.பல்கலைக்கழக அணி 48 புள்ளிகளுடன் முன்னிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கதின் அனுமதியுடன் நடைபெற்ற 83 போட்டிகளின் முடிவுகளின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையான கழகங்களின் நிலையில் யாழ்.பல்கலைக் கழகம் முதலிடத்தைப் பிடித்தது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2ஆவது ஆண்டாக நடத்தும் 2011ஆம் ஆண்டிற்கான யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக அணி 17 போட்டிகளில் பங்குபற்றி 11 போட்டிகளில் வெற்றிபெற்று 48 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், ஜொலிஸ்ரார் அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 11 போட்டிகளில் வெற்றிபெற்று 38.5 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும், கே.சீ.சீ.சீ.அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 9 போட்டிகளில் வெற்றிபெற்று 32 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும், பற்றீசியன்ஸ் அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றிபெற்று 22 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும், யாழ்.ஜொனியன்ஸ் அணி 10 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 18.5 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும், கிறஸ்கொப்பர்ஸ் அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றிபெற்று 17.5 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்திலும்,

ஸ்கந்தா ஸ்ரார் அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 16 புள் ளிகளைப் பெற்று ஏழாம் இடத்திலும், சென்றல்லைட்ஸ் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 15 புள்ளிகளைப் பெற்று 8ஆம் இடத்திலும், ஸ்ரீகாமாட்சிக் கழக அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்று 13 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்திலும்,

யூனியன்ஸ் அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 11.5 புள்ளிகளைப் பெற்று 10 ஆம் இடத்திலும், திருநெல்வேலி கிரிக்கெற் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 10 புள்ளிகளைப் பெற்று 11 ஆம் இடத்திலும்,

ஈகிள்ஸ் அணி 9 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்று 9.5 புள்ளிகளைப் பெற்று 12ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 8.5 புள்ளிகளைப் பெற்று 13ஆம் இடத்திலும், மானிப்பாய் பரிஸ் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 8 புள்ளிகளைப் பெற்று 14 ஆம் இடத்திலும், அரியாலை சென்றல் அணி 5 போட்டிகளில பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று, நியூஸ்ரார் அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று, ஸ்ரான்லி அணி 5 போட்டியில் பங்குபற்றி ஒரு போட்டிகளில் வெற்றி பெற்று தலா 3 புள்ளிகளைப் பெற்று 15 ஆம் இடத்திலும்,

ஒவ்ட்கோஸ் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 1.5 புள்ளிகளைப் பெற்று 16 ஆம் இடத்திலும், வளர்மதி அணி 4 போட்டிகளில் பங்குபற்றி, கே.சீ.சீ.சீ 'பி' அணி ஒரு போட்டியில் பங்குபற்றி வெற்றிகள் எதுவும் பெறாத நிலையில் உள்ளனர்.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு ஜோர்ஜ்வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் பத்தாயிரம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படும். இந்நிகழ்வில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகளும் 2012 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் முக்கோண வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

2010 ஆம் ஆண்டு இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக அணி 44 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டமையால் மேற்படி வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசலையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (07)

## அமரர் பிரபாகரன் மென்பந்துச்சுற்று ஐங்கரா அணியும் அரையிறுதிக்குள்

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினரால் அமரர் பிரபாகரன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும், கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதி ஆட்டமொன்றில் வெற்றிபெற்ற ஐங்கரா அணியும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் 3.30 மணிக்கு ஆரம்பமான மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர்களைக் கொண்ட போட்டியில் ஐங்கரா அணியும், புலோலி இளைஞர் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புலோலி இளைஞர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஐங்கரா அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாத புலோலி இளைஞர் கழக அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின.

இறுதியில் 11 ஓவர்கள் நிறைவில் 54 ஓட்டங்களை மட்டும் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது புலோலி அணி.

அவ்வணியின் சார்பாக கிரிதரன் 16, நிலோஜன் 11 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் துஷ்யந்தன் 3, ஜீவன் 2 விக்கெட்டுக்களைப் பெற்றனர். பதிலுக்கு 55 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய ஐங்கரா அணி 6.1 ஓவரில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணி சார்பாக ஜீவன் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களைப் பெற்றார்.

இவ் ஆட்டத்தில் சகலதுறையிலும் ஜொலித்த ஜீவன் ஆட்டநாயகனாத் தெரிவு செய்யப்பட்டார். 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதன் மூலம் அரையிறுதிக்குள் ஐங்கரா அணி. (62)

## விளையாட்டு பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சி முகாம் நாளையும், நாளை மறுதினமும் நல்லூர் ஸ்தான சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ்.வலய விசேட தேவையுடைய மாணவர்களைத் தவறாது சமூகம் தருமாறு யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# எனது நூறாவது டெஸ்ட் போட்டியினை இலங்கை அணி வெற்றியுடன் கொண்டாடும்



(கொழும்பு)

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குமார் சங்கக்காரவின் 100 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இப்போட்டியை இலங்கை அணி வெற்றியுடன் கொண்டாடும் என தான் எதிர்பார்ப்பதாக சங்கக்கார தெரிவித்துள்ளார்.

எனது நாட்டை இத்தகைய காலம் பிரதிநிதித்துவப்படுத்துவது பெரும் கௌரவமாகும். 100 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதும் பெரும் கௌரவமாகும். வீரர்களுக்கு அடிக்கடி இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை.

இவ்வளவு காலம் எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை குறித்து பெருமையடைகிறேன்.

எனினும் மிக முக்கிய விடயம் என்னவென்றால் முடிந்தளவு எமது அணி வெற்றி பெறுவற்கு பங்களிப்புச் செய்வதாகும். பங்குபற்றுவது சிறந்தது. ஆனால் உங்கள் அணி சகாக்களிடமும் ஏனையோரிடமும் நாம் வெற்றியாளர்கள் எனக் கூற விரும்புவீர்கள்.

100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமையை அடையவுள்ள 5 ஆவது இலங்கை வீரர் குமார் சங்கக்கார ஆவார்.

முத்தையா முரளிதரன் (132), மஹேல ஜயவர்தன (121), சமிந்த வாஸ் (111), சனத் ஜயசூரிய, (110) ஆகியோர் நூற்றுக்கும் அதிகமான போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

அடுத்தமாதம் தனது 34 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள குமார் சங்கக்கார 2000 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக காலியில் நடந்த டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் 8572 ஓட்டங்களை (சராசரி 55.66) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் 25 சதங்களும் அடங்கும்.

அதிக டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்த இலங்கை வீரர்கள் பட்டியலில் சங்கக்கார 2 ஆம் இடத்திலுள்ளார்.

மஹேல ஜயவர்தன 121 டெஸ்ட் போட்டிகளில் 9801 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்நிலையில் 10,000 டெஸ்ட ஓட்டங்களையும் 30 சதங்களையும் பெறுவதே தனது இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை அணியை மீண்டெழுவதற்கு அனுமதிக்க மாட்டாராம் கிளார்க்

இலங்கை கிரிக்கெட் அணியை மீண்டெழ அனுமதிக்க முடியாது என அவுஸ ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

.தமது தலைமைத்துவத்தின் கீழ், அவுஸ்ரேலிய அணி மீண்டும் சரிவைச் சந்திக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்றாது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணியை வெற்றி பெறுவதற்கான முக்கிய வியூகங்களை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சரிவைச் சந்தித்து வந்த அவுஸ்ரேலிய அணி, எதிர்வரும் காலங்களில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதில் தாம் திடமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இங்கிலாந்து ருவென்ரி-20 அணிக்கு தலைவராக கிரஹாம் ஸ்வான் நியமனம்

(லண்டன்)

சர்வதேச ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் தலைவராக சுழற்பந்துவீச்சாளர் கிரஹாம் ஸ்வான் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவராகச் செயற்பட்டு வந்த ஸ்ருவட் புரோட் இந்திய அணியுடனான போட்டியில் உபாதைக்கு உள்ளானதை அடுத்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அணியின் உப தலைவர் இயன் மோர்கனும் உபாதைக்குள்ளான நிலையில் இந்த மாத இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ருவென்ரி 20 கிரிக்கெட் தொடருக்கு கிரஹாம் ஸ்வான் இங்கிலாந்து அணியின் தலைவராகச் செயற்படவுள்ளார்.

இதேவேளை அடுத்த மாதம் ஐந்து சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றும் பொருட்டு, இந்தி யாவுக்குச் செல்லவுள்ள இங்கிலாந்து அணியில் இருந்தும் ஸ்ருவட் புரோட் நீக்கப்பட்



டுள்ளார். அத்துடன் தோள்பட்டை உபாதை காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதம் வரை இயன் மோர்கனும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# இந்த வருடத்தின் வருமானத்திலும் சாதனை படைத்தார் ஜோகோவிச்

(நியூயோர்க்)

செர்பியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீரரும், அமெரிக்க ஓப்பன் சம்பியனுமான நோவக் ஜோகோவிச், 2011ஆம் ஆண்டில் ரென்னிஸ் போட்டியின் மூலம் 50 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) ஈட்டி புதிய சாதனை படைத்தார்.

இந்த ஆண்டில் அவர் விளையாடிய 66 போட்டிகளில் 64 இல் வெற்றி கண்டார். இதன்மூலம் அவர் விளையாட்டில் மட்டுமின்றி வருவாயிலும் சாதனை படைத்தார்.

இதற்கு முன் ஸ்பெயினின் ரபேல் நடால், 2010 ஆம் ஆண்டிலும், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2006ஆம் ஆண்டிலும் 48 கோடி ரூபா ருவாய் ஈட்டிச்



சாதனை படைத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் நடாலை வீழ்த்தியதன் மூலம் ஜோகோவிச்சுக்கு 9.5 கோடி ரூபா கிடைத்தது.

ஜோகோவிச், அமெரிக்க ஓப்பனில் வென்ற கோப்பையுடன் நியூயோர்க்கில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் மேற்பகுதிக்குச் சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், இந்த ஆண்டு என்னுடைய கனவு ஆண்டு, இது என் வாழ்வின் மிகச்சிறந்த தருணங்கள், இப்போதைய ஒவ்வொரு நிமிடத்தையும் நேசிக்கிறேன். நடாலை வீழ்த்தியது மிகவும் இனிமையான ஒன்று. அமெரிக்க ஓப்பனில் பட்டம் வெல்ல வேண்டும் என்பது ஒவ்வொரு ரென்னிஸ் வீரருக்கும் கனவாக இருக்கும். அதை நான் வென்றது த்ரில்லாக உள்ளது என்றார்.

# மோசமாகப் பந்துவீசிய நாட்களில் கண்ணாடியில் கேள்வி கேட்டேன்

## என்கிறார் ஹர்பஜன்

(புதுடில்லி)


எனது கிரிக்கெட் வாழ்கையில், மோசமாகப் பந்துவீசிய நாட்களில், ஓய்வறையிலுள்ள கண்ணாடியைப் பார்த்து எனக்கு நானே எப்படிச் செயற்பட்டேன் எனக் கேட்டுக் கொள்வேன். இதன்மூலம் செயத தவறைக் கண்டறிந்து உடனடியாக அதனைத் திருத்திக் கொள்ள முயற்சிப்பேன் என, இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது, அடிவயிற்றுப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இதனால் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து பாதியில் தாயகம் திரும்பிய இவர் பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் மறுவாழ்வு பயிற்சி மேற்கொண்டார்.

இதுகுறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது:

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து காயம் காரணமாக பாதியில் வெளியேறியது வருத்தம் அளிக்கிறது. இத்தொடர் இந்திய அணிக்கு மிகவும் மோசமாக அமைந்தது ஏமாற்றமான விடயம். பெங்களூரில் நடந்த மறுவாழ்வுப் பயிற்சியின் போது நிறைய பந்து வீச்சுப் பயிற்சி மேற்கொண்டேன்.

தற்போது முழுஉடற்தகுதியுடன் இருக்கும் நான், சம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட எந்தத் தொடரிலும் பங்கேற்கத்



தயாராக உள்ளேன். இதன்மூலம் டெஸ்ட் ஒருநாள் ருவென்ரி 20 என அனைத்து வதமான கிரிக்கெட் போட்டியிலும் விளையாடத் தயாராகவுள்ளேன்.

ஒரு போட்டியின் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு, வீரர்கள் பற்றி தவறாக விமர்சனம் எழுகிறது. நான் சிறப்பாகச் செயற்படவில்லை என்றால் டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட்டுக்களை எப்படிக் கைப்பற்ற முடியும். தற்போதுள்ள இந்திய அணி, அண்மையில் உலகக்கோப்பை வென்றது.

முன்னதாக டெஸ்ட் அரங்கில் முதலிடம பிடித்தது. எனவே மோசமான காலகட்டத்தில் தவறாக விமர்சனம் செய்வதைத் தவிர்த்தால் நல்லது.

சுழற்பந்துவீச்சில் சாதிக்க, சீனியர் வீரர் அனில் கும்ளே நிறைய ஆலோசனைகள் வழங்கினார்.

இவரைத் தவிர, ஹிர்வானி, சச்சின், ராவிட் உள்ளிட்ட அனுபவ வீரர்களும் நிறைய உதவிகள் செய்தனர் எனத் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் பயணம்




(இஸ்லாமாபாத்)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பங்களாதேஷிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இரண்டு அணிகளுக்கும் இடையில் நடத்தப்படவுள்ள போட்டிகள் குறித்து, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள், ஒரு ருவென்ரி 20 போட்டியும் இடம்பெறவிருக்கின்றது.

எனினும் இது குறித்து உத்தியோகபூர்வமான உறுதிப்படுத்தல்கள் எதுவும் வெளியாகவில்லை.


## ஹரிஸ் காயம்

(கொழும்பு)

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று தொடங்குகிறது. இந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. அவர் வலது பின்னங்காலில் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வருகிறார். அவர் உடற்தகுதி பெறாவிட்டால் பீட்டர் சிடில அல்லது ஜேம்ஸ பட்டின்சன் ஆகியோரில் ஒருவர் இடம்பெறுவர். ஹரிஸ், முதல் இரு டெஸ்டிலும் சேர்த்து மொத்தம் 11 விக்கெட்டுகள் வீழ்த்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# வேகமாக வளர்ச்சியடைகிறது இலங்கையின் பொருளாதார நிலை

## அமைச்சர் விமல் பெருமிதம்



(கொழும்பு)

இலங்கையில் சிறந்த வளர்ச்சி வேகத்துடன் பொருளாதார நிலைமை உருவாகியுள்ளதாக நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிதத்துள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள contruction expo சர்வதேச நிர்மாணக் கண்காட்சி தொடர்பான தெளிவூட்டல் செயற்றிட்டத்தில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

contruction expo சர்வதேச நிர்மாணக் கண்காட்சி அடுத்த வருடம் யூன்மாதம் 29,30 மற்றும் ஜுலை முதலாம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கை நிர்மாணத்துறையினர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. பல்வேறு நாடுகளிலுள்ள தொழில்நுட்ப முறைகள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள நிபுணர்களின் தொழில்நுட்ப முறைகள் தொடர்பாகவும் இதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த துரதிஷ்ட வசமான காலகட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்து தாய் நாட்டின் சிறந்த எதிர்பார்ப்புக்களுடன் நல்லதோர் எதிர்காலத்தை நோக்கி அமைதியான நாடு கட்டியெழுப்பப்படுவதனை அவதானிக்க முடிவதாக இதன் போது அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டார். பொருளாதார சுட்டெண்கள் அல்லது வேறு ஏதேனும் புள்ளிவிபரங்கள் ஊடாக நாடு குறித்து சிறந்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய தகவல்கள் முன்னர் அறியக் கிடைக்கவில்லை என்று அமைச்சர் கூறினார். எனினும் தற்போது அந்த சூழ்நிலை மாறியுள்ளதுடன் சிறந்த வளர்ச்சி வேகத்தை காட்டக்கூடிய பொருளாதாரம் குறித்து இன்று அனைவராலும் பேச முடிந்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# பொலிஸ்திணைக்கள திறன்களை மறுசீரமைக்க பாரிய நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் செயற்றிறன் மற்றும் திறன்களை அதிகரிக்கும் வகையிலான பாரிய மறுசீரமைப்புத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பல பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகள் குறித்து கவனத்திற் கொள்ளப்படுவதில்லை இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொலிஸ் திணைக்களத்தினால் திறனற்ற பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

சில பொலிஸ் நிலையங்களுக்கு திடீரெனச் செல்லவுள்ளோம். திறனற்ற வகையில் செயற்படும் பொலிஸ் திணைக்களங்களைக் கண்டுபிடிப்பதே இதன் நோக்கமாகும்.

பொலிஸ் சேவையானது பொதுமக்களுடன் நட்புறவுடன் பழகி அவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதே ஆகும். எனவே, திறனற்ற வகையில் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படும் பொலிஸ் நிலையங்களை குறைக்கவுள்ளோம் என்றார்.

# இராஜதந்திர வரைமுறைகளை மீறுகின்றனர் ராஜதந்திரிகள்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சில நாடுகளின் இராஜதந்திரிகள், இராஜதந்திர வரைமுறைகளை மீறிச் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.**



அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களையும், பணிப்பாளர்களையும் குறித்த இராஜதந்திரிகள் நேரடியாக சந்திப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைசார் அமைச்சர்கள் அல்லது அமைச்சுக்களின் செயலாளர்களது அனுமதியின்றி இராஜதந்திரிகள் அரச நிறுவன அதிகாரிகளை சந்திப்பது இராஜதந்திர வரைமுறைகளுக்கு புறம்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு இராஜதந்திர வரைமுறைகளை மீறிச் செயற்படக் கூடாது என குறித்த இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் துறை அமைச்சர்களும், அமைச்சு செயலாளர்களும் அறிந்திராத வகையில் அரச நிறுவன உயரதிகாரிகளுடன் சில நாட்டு இராஜதந்திரிகள் நேரடியான தொடர்புகளைப் கொண்டிருப்பதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு இராஜதந்திர வரைமுறை மீறிச் செயற்படும் அநேகமான இராஜதந்திரிகள் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகள், இலங்கையில் நல்லாட்சி நிலவவில்லை என குற்றம் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சீனா போன்ற நாடுகள் எந்த சந்தர்ப்பத்திலும் இவ்வாறான குற்றச் சாட்டுக்களை முன்வைத்ததில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன இராஜதந்திரிகள் நாட்டின் உள் விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்வதில்லை எனவும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

# தரம் 5 புலமைப்பரிசில் சான்றிதழ் ஒன்றாக வழங்குவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இவ்வருடம் ஒன்றாக வழங்கப்பட உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

ஒரு வினாப் பத்திரத்திற்கு 35 புள்ளிகள் என இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் 70இற்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ள மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

கடந்த வருடம் மற்றும் இவ்வருடத்துக்கான சான்றிதழ்கள் ஒரே நேரத்தில் வழங்கப்பட உள்ளன.

ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணி ஓகஸ்ட் மாதம் 30 ஆம்



திகதி முதல் செப்ரெம்பர் 04 ஆம் திகதி வரையில் வடக்கு - கிழக்கு உட்பட 29 நிலையங்களில் இடம்பெற்றன.

இம்முறை பரீட்சைக்கு 3இலட்த்து 21ஆயிரத்து 401 மாணவர்கள் தோற்றினர் எனவும் அவர் தெரிவித்தார்.

# முறையான சட்ட உதவி கிடைக்காத இலங்கைப் பெண் ஜோர்தான் சிறையில்

(கொழும்பு)

போதிய சட்ட உதவிகள் கிடைக்காததால் இலங்கைப் பெண்ணொருவர் ஜோர்தானில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலி மாவட்டத்தின் ரத்கம, கொடவுதாவத்த எனும் இடத்தைச் சேர்ந்த 33 வயதான கே.சிறியானி எனும் இப் பெண் 2006ஆம் ஆண்டு ஜோர்தானுக்குச் சென்றுள்ளார்.

ஜோர்தானின் சஹாப் நகரிலுள்ள ஐவரி ஆடைத்தொழிற்சாலையில் (தையல்) இயந்திர இயக்குநகராகப் பணியாற்றியுள்ளார். அங்கு சிரமங்களை எதிர்கொண்டதன் காரணமாக அத் தொழிற்சாலையிலிருந்து விலகியதுடன் தங்குவதற்கு வேறொரு இடத்தைத் தேடிக்கொண்டார்.

அதையடுத்து, அவருக்கு உதவ முன் வந்த சட்டவிரோத குடியேற்றவாசியொருவர் பின்னர் அப்பெண்ணை விபசாரத்திற்கு தள்ளினார். அப்பெண் அதைக் கடுமையாக எதிர்த்தார்.

அதன்பின் அப்பெண்ணை கொல்ல முயற்சியொன்று நடந்தது. அப்போது தன்னைத் தாக்க வந்தவருடன் அப்பெண் சண்டையிட்டார். இதில் தாக்க வந்த நபர் பலியானார்.

அச்சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட சிறியானிக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டு 15 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தனக்கு முறையான மொழிபெயர்ப்பு உதவியும் தனக்கும் தனது சட்டத்தரணிக்கும் இடையில் முறையான தொடர்பாடல் இல்லாததாலும் தான் சுயபாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டமைக்கான ஆதாரத்தை முன்வைத்து, தான் அப்பாவி என்பதை நிரூபிக்க முடியாத சூழலில் குற்றவாளியாக காணப்படும் நிலை ஏற்பட்டதாக சிறியானி தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியா செல்லமுற்பட்டோரில் அறுவர் புலிகளின் உறுப்பினர்கள்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் செல்லும் போது கைது செய்யப்பட்ட 44 பேரில் 6 பேர் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என குற்றத் தடுப்புப் பிரிவினர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் செல்ல முற்பட்ட 44 பேர் கடந்த 11ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது விளக்கமளித்த பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களில் 6 பேர் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

தற்போது அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கைதான 44 பேரில் 36 பேரை, எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கவும், கைதான இரண்டு சிறுவர்களை சரீர பிணையில் விடுவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அரசுக்கெதிரான வெளிநாட்டு பிரசாரம் 25 மாவட்டங்களில் விளக்க நடவடிக்கை

(கொழும்பு)



அரசாங்கத்திற்கெதிராக வெளிநாட்டு சக்திகள் மேற்கொண்டுவரும் போலியான பிரசாரங்களுக்கெதிராக இலங்கை மனித உரிமைகள் சமாதான நீதவான்களின் அமைப்பு நாடுதழுவிய ரீதியில் விளக்கமூட்டல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக அமைப்பின் தேசியத் தலைவர் பேராசிரியர் ஜயந்த களுபோவில தெரிவித்துள்ளார். நாட்டின் 25 மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று மூவினமக்களையும் ஒன்றுதிரட்டி இந்தப்பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஆரம்ப விழிப்பூட்டல் செயலமர்வு நாளைமறுதினம் பதுளை துன்கிந்த ரிட்விடுதியில் நடைபெறவுள்ளது 18ஆம் திகதி நுவரெலிய டிக்கோயா கரவல பஸாரில் இடம்பெறவுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சர்வமத தலைவர்களுடனும் இதுதொடர்பாக அமைப்பு கலந்துரையாடல்களை நிகழ்த்தவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

3) இப் பகுதியில் இடம்பெறும் இரண்டு விதமான பாணிகளையும் குறிப்பிடுக.

4) "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" இக் கூற்றினை விளக்குக.

5) இக்கட்டுரையில் இஸ்லாம் மார்க்க மரபு எதனை அனுமதியாது?

## பகுதி III

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.) (ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.)**

04. நளவெண்பா கலிநீங்கு காண்டப் பகுதியில் நளனுடைய உள்ளத்துயர் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

05. மழைக்கை என்ற நாடகத்தில் கன்னனுடைய சிறப்பு எவ்வாறு எடுத் துரைக்கப்பட்டுள்ளது?

06. காலனும் கழவியும் என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக.

அ) 1) யமன்
2) மருதாயி
3) மாடசாமி

ஆ) ஆசிரியரின் மொழிநடை பற்றி யாது கூறுவீர்?

07. விபுலானந்தருக்கும் ஆறுமுகநாவலருக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை கட்டுரை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்?

### பயிற்சி வினாக்கள் ( தமிழ் இலக்கியம்)

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   1. செத்தான்
   2. மு.·.டீது

2) அவன் பொருட்களை வண்டியில் ஏற்றினான்- இச்செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

3) அம்மாள் மணி பத்தாச்சுது மருந்தைக் குடிச்சுப்போட்டுப் படுங்கோவன் - பொருத்தமான நிறுத்தக் குறிகளையிட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

4) உடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வ்ருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

5) நான் சம்பளத்திற்கு வேலை செய்கிறேன் - இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது? அது என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

6) கலை, ஓய், பரவு, எரி - இவற்றுள் தன்வினையாகவும் பிறவினையாகவும் பயன்படும் வினையடிகள் எவை?

7) பாடசாலைகளில் அறிக்கை எழுதப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுக?

8) தொழில் முறைக் கடிதத்தின் உறுப்புக்களைக் குறிப்பிடுக.

9) துண்டுப்பிரசுரம் ஒன்றை எழுதும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

10) நேர்முக வர்ணையாளன் ஒருவனுக்கு தான் வர்ணிக்கும் நிகழ்ச்சி பற்றிய முன்னறிவு அவசியமானது. இதனை ஓர் உதாரணம் மூலம் விளக்குக.








திரு.T.S.குகன்
(ஆசிரியர்)

க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011 நேரம் - 3 மணி



# கல்வி முரசு

## இலக்கிய நயம் (விருப்பத்துக்குரியது) பகுதி I



யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**கவனிக்க:** **பகுதி I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும்**
**பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும்**
**பகுதி III இல 4,5,6,7 ஆகிய வினாக்களுள் எவையேனும்**
**இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

### பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக

01.

I. "உச்சிமீது வானும் மீனும் ஒடிந்து வீழ்ந்த போதிலும் அச்சமின்றித் தடைகள் யாவும் துச்சமென்று கிளம்புவோம்"என்ற பாடலடிகள் வெளிப்படுத்தி நிற்கும் உணர்வு யாது என விளக்குக

II. "ஐயனே நான் போகலுற்றேன். ஈண்டிருந்து இயன்ற தொண்டு செய்வேன்"என்ற கூற்று யாரால்? யாருக்குக் கூறப்பட்டது?

III. "ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" இக் குறட்பாவின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக.

V. "என் கனவுகளில்
நீ வந்து
காதோடு அழைக்கிறாய்
சின்ன மகளே என்று" என்னும் தொடரினால் வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

V. "போதியோ பொன்னியம்மா" என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

VI. நாவலர் இருவரையும் உருவாக்கிய பின்னணி யாது?

VII. "கண்ணம்மா என் குழந்தை" என்ற சிறுகதையில் கண்ணம்மாவை எவ்வாறெல்லாம் விளித்துப்பாடுகிறார்?

VIII. வேற்று மொழிகளைக் கற்றோம் - எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத்திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை அறியாது கெட்டோம்.

அ) இங்கு முதுசொத்து எனக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ) "ஆற்றிலே புளி கரைத்திட்டோம்" -என்பது எதனைக் குறிக்கின்றது?

IX. நாட்டார் பாடல்களில் உள்ள நகைச்சுவை இரண்டு தருக?

X. வெற்றிப் பயணம் என்ற கவிதை தற்காலத்திற்குப் பொருத்தமானதா? ஏன் என்று குறிப்பிடுக?

**02.** பின்வரும் செய்யுள்களினதும் உரைப்பகுதியினதும் பொருளை உங்கள் மொழிநடையில் எழுதி, தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.

அ) தூய மெல் அரியணைப் பொலிந்து தோன்றினான்,
சேய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
**'நாயகன் இவள் கொல்? என்று அயிர்த்து, நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று ஐயம் நீக்கினார்.**

ஆ) புனை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்-இன்னருள் கண்
**டஞ்சினா னாவி யழிந்தான் அறவுயிர்த்து**
**நெஞ்சினால் எல்லாம் நினைந்து.**

இ) நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**

ஈ) எலலோரும் கண்மூடி வாழ்ந்தார்கள் அல்லர், எவ்வளவோ எண்ணிப்பார்த்து, வாழ்ந்து பார்த்து, அவற்றால் தெளிந்த உண்மைகளை நாமும் உணர்ந்து நடக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். புத்தர், திருவள்ளுவர் முதலானவர்கள் சிறந்த சிந்தனையாளர்கள், சீர்திருத்தக்காரர்கள். அவர்கள் அறிவுறுத்திய வழிகள், கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் தேய்ந்த ஒற்றையடிப் பாதைகள் போன்றவை. அந்தத் தேய்ந்த வழிகளில் **அச்சம் இல்லாமல் தயக்கம் இல்லாமல் நடப்பதால் நமக்கு எவ்வளவோ நன்மை உண்டு.**

உ) நமது ஆயுளிலேயே இப்படி இருக்கும் போது, மனித இனத்தின் வாழ்வில் இவ் இனம் ஒரு காலத்தே பேச்சே வழங்காதபடி இருந்தமை நம் நினைவில் இல்லை என்பது வியப்பாகுமா? மக்கள் இனத்தின் மிகப்பூர்வ சரித்திரத்தில் வெளிச்சமற்ற இருட்பகுதி ஒன்றுண்டு. அப்பகுதியை நமது மனக்கண்ணால் உற்று நோக்குவோமானால் **அங்ஙனம் பேச்சே வழங்காத காலம் உண்டென்பது விளங்கும்.** அக்காலத்தே மக்களுக்கு கருத்தை வெளியிட இன்றியமையாதது என்று இப்போது தோன்றும் பேச்சு முறை ஆரம்ப நிலையில்தான் இருந்தது.

## பகுதி II

**(பாடற்பகுதிக்கு அல்லது உரைப்பகுதிக்கு விடை எழுதுக)**

03. கீழே தரப்பட்டுள்ள பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனி பசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும் - ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்
குழலிடை வாய்க்கும் இசையும் - வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும், - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்
விழைகுவ னேனும், தமிழும் - நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!



பயிலுறும் அண்ணன் தம்பி, - அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை, - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில் போற் பேசிடும் மனையாள், - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயல வராகும் வண்ணம் - தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்.

நிலச் சுடர்மணி வானம், ஆங்கே
நிறையக் குளிர்வெண் நிலவாம்,
காலைப் பரிதியின் உதயம், - ஆங்கே
கடல் மேல் எல்லாம் ஒளியாம்
மாலைச் சுடரினில் மூழ்கும், - நல்ல
மலைகளின் இன்பக் காட்சி
மேலென எழுதும் கவிஞர் - தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

1) இனிமைக்கு எடுத்துக்காட்டாகக் கவிஞர் எடுத்துக் காட்டுவன எவை?

2) கவிஞர் பெரிதும் விரும்புவன எவை?

3) கவிஞர் தமிழுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு எவ்வகையானது என்கிறார்?

4) 'தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்' என்ற பாடலடியின் ஊடாக கவிஞர் உணர்த்துவது யாது என விளக்குக?

5) தமிழ் தன் அறிவினில் எவ்விதம் உறைந்துள்ளதெனக் கவிஞர் கூறுகின்றார்?

**அல்லது**

வடமொழியிலே இராம கதையை வகுத்து வான்புகழ் கொண்டவர் வான்மீகி முனிவர். இராமனும் சீதையும் திருமணத்தின் முன்னர் ஒருவரையொருவர் கண்டு கழிபெருங் காதல் கொண்டதாய் அவர் கூற வில்லை.

ஆயின், இராமர்கதையைத் தமிழ் செய்ய வந்த கம்பநாடர் இனிய தமிழ் மரபினைத் தழுவி தலைவனும் தலைவியும் திருமணத்தின் முன்னர் ஒருவரையொருவர் கண்டு கழிபெருங் காதல் கொண்டதாகத் கற்பனை செய்துள்ளார். தமிழியற் கொப்ப அவர் அவ்வாறு கூறியமை, முதனூலுக்கு மறுகொள்ளக் கூறியமை- வழுவாகாது. மரபெனவே கொள்ளப்படுகிறது.

கௌசிகர் முன்னும் இலக்குவன் பின்னும் வர இராமன் மிதிலை நகருட் செல்கின்றான். மேல்மாடியிலே பெண்ணலங்கனிய நிற்கின்றாள் பிராட்டி. இருவர் கண்களும் ஒன்றையொன்று கவ்வி உண்டு கலக்கின்றன. உணர்வும் கலக்கின்றது. இருவரும் ஒருவர் உள்ளத்து மற்றையவர் மாறிப்புகுகின்றனர்.

"எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினைக் கௌவி ஒன்றையொன்று
உள்ளவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

பிராட்டி நோக்கிய நோக்காகிய கூரிய வேலாயுதங்கள் வீரனின் புயவரைகளிற் சென்றுபதிகின்றன. வீரத்திரு மகனின் கண்களோ திருமகளின் தனபாரங்களிற் சென்று தைக்கின்றன. இங்ஙனம் தன் கற்பனையை வளரவிட்ட கம்பர் தலைமக்களின் உள்ளத்துணர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

1) வான்மீகியின் கருத்துடன் கம்பர் மாறுபடும் இடமொன்றைக் குறிப்பிட்டு, அதனை விளக்குக.

2) கம்பர் புதிய காதற்சுவையை ஊட்டுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

இலக்கியநயம் I- II - III - தரம் 11 - 2011 - கல்விமுரசு


| | | | |
|---|---|---|---|
| A: APPLE | B: BLUETOOTH | C: CHAT | D: DOWNLOAD |
| E: E MAIL | F: FACEBOOK | G: GOOGLE | H: HEWLETT PACKARD |
| I: iPHONE | J: JAVA | K: KINGSTON | L: LAPTOP |
| M: MESSENGER | N: NERO | O: ORKUT | P: PICASSA |
| Q: QUICK HEAL | R: RAM | S: SERVER | T: TWITTER |
| U: USB | V: VISTA | W: WiFi | X: Xp |
| Y: YOU TUBE | Z: ZORPIA | | |

# புதிய ஆங்கிலபாடம் ABCD....


ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொற்களை ஆரம்பகாலங்களில் நாம் கற்றதுண்டு. தொழில் நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் அந்தக் கல்வி முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இணையம், சமூக வலையமைப்புகள் என உலகம் மற்றுமொரு பரிணாமத்துக்குள் பயணித்துக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் தற்போதைய மாணவர்கள் இப்படித்தான் விரும்பிப் படிப்பார்கள் என்பதை சுவாரஸ்யமாக உருவாக்கப்பட்டதையே இங்கு காண்கிறீர்கள்.

# கின்னஸ் சொக்லேட்



அமெரிக்காவைச் சேர்ந்த சொக்லேட் நிறுவனம் 5.4 தொன் எடையுள்ள பிரமாண்ட சொக்லேட் தயாரித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளது. அமெரிக்காவின் சிகாகோ நகரைச் சேர்ந்த நிறுவனம் 'வேர்ல்ட்ஸ் பைனஸ்ட் சொக்லேட் சொக்லேட் தயாரிப்பில 60 ஆண்டு பாரம்பரியம் வாய்ந்தது. இலாபத்தில் பெரும் பங்கை தொண்டு நிறுவனங்களுக்கும் சமூக பணிகளுக்கும் வழங்கி வருகிறது. 540 கிலோ பாதாம்பருப்பு, 2494 கிலோ சீனி, 907 கிலோ பால் பவுடர், 771 கிலோ கொக்கோ 635 கிலோ சாக்லேட் எசன்ஸ் கலந்து இந்த சொகலேட் தயாரிக்கப்பட்டுள்ளது. லிமிட்டா சாப்பிடுங்க பெரிசா சாதனை பண்ணுங்க என்று விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளிகள் தோறும் ஊர்வலம் போகப் போகிறது கின்னஸ் படைத்துள்ள இந்த சூப்பர் சொக்லேட்.




# பொய் சொல்லாதே...

பொய் சொல்வோரைக் கண்டு பிடிப்பதற்கு, அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கமெரா ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குறித்த கமெராவின் ஒளிக்கற்றைகளை முகத்தில் ஒளிரச் செய்வதன் மூலம் நபர் ஒருவர் பொய் சொல்கின்றாரா அல்லது மெய் சொல்கின்றாரா என்பதனைக் கண்டு பிடிக்க முடியும். அதி நவீன தேர்மல் இமாஜிங் தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி முறைமையின் மூலம் இந்தக் கமெரா இயங்குகின்றது.

இந்த அதி நவீன கருவி பாதுகாப்புத் தரப்பினருக்கு மிகவும் உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கமராவின் மூலம் மூன்றில் இரண்டு வீதமான நபர்களின் முக பாவனையின் அடிப்படையில் உண்மை பேசுகின்றார்களா என்பதனை கண்டறிய முடியும் என பிரித்தானிய விஞ்ஞானி ஹசன் உகேய்ல் தெரிவித்துள்ளார். பிரட்போர்ட் மற்றும் அப்ரிஸ்ட்விச் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பொய் சொல்லுபவர்களைக் காட்டிக்கொடுக்கும் புதிய கருவி! பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் பின்னர் இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. கண் அசைவு, நகம் கடித்தல், உதடுகளைக் குவித்தல், மூக்கைச் சுருக்குதல், பலமாக மூச்சு விடல் உள்ளிட்ட பல்வேறு முக உணர்வு வெளிப்பாடுகளைக் கொண்டு நபர்கள் உண்மை பேசுகின்றார்களா அல்லது இல்லையா என்பதனைக் கண்டுகொள்ள முடியும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்



# புதிய கிரகம் கண்டுபிடிப்பு

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானிகள் கிரகங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதிநவீன டெலஸ்கோப் மூலம் விண்வெளியில் ஆய்வு நடத்திய போது பூமியைப் போன்று மற்றொரு புதிய கிரகம் இருப்பதை கண்டு பிடித்தனர். இது பூமியை விட 3.6 மடங்கு பெரியது. இதைச் சுற்றி விண்மீன் (நட்சத்திரங்கள்) கூட்டம் உள்ளது.

அதற்கு எச்.டி.85512 பி என பெயரிட்டுள்ளனர். இந்தக் கிரகம் பூமியில் இருந்து 36 வெளிச்ச ஆண்டுகள் தூரத்தில் உள்ளது. இதன் வலது புறம் தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. எனவே, இங்கு உயிர்கள் வாழ முடியும் எனக் கருதப்படுகிறது. மேலும் இந்தப் புதிய கிரகத்தின் வெளிப்புறத் தோற்றம் பாறைபோன்று காட்சி அளிக்கிறது. மேகக் கூட்டங்களும் காணப்படுகிறது. ஆகவே இங்கு உயிர் வாழ முடியும் என கருதப்பட்டாலும் கூட தீவிர ஆய்வுக்குப் பிறகே இறுதியான முடிவுக்கு வரமுடியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# குடிகார மரை



பொதுவாக மனிதர்கள் குடி போதையில் அலம்புவதும் தெரு வோரங்களிலும் விழுந்து கிடப்பதும் வழமை. ஆனால் விலங்குகளும் அப்படியா? ஒரு மரையொன்று குடிபோதையில் அப்பிள் மரத்தில் சிக்கியுள்ளது . இச்சம்பவம் சுவீடன் நாட்டில் உள்ள கோட்டன்பர்க் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறிச்சு நேரில் பார்த்த ஜோஹன்சன் தெரிவிக்கையில்,

எனது வீட்டு முற்றத்தில் நிற்கும் போது உறுமும் சத்தம் கேட்டது. சத்தம் வரும் திசையை நோக்கிச் சென்று பார்த்த போது அப்பிள் மரத்தில் ஒரு மரை சிக்குண்டு காணப்படுவதைக் கண்டேன். உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தேன் என்றார். சம்பவ இடத்திற்கு விரைந்த காவல் துறையினர் அந்த மரையை பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர். இருந்தும் மீண்டும் அதே மாதிரி குடிபோதையில் அப்பிள் மரத்தில் தொங்கியது.

# ஐபோன், ஐபேடுட், அண்ட்ராய்டுட் கருவிகளிலும் ப்ளொக்கர் பயன்படுத்த

கூகிளின் ப்ளொக்கர் சேவை மூலம் இணையத்தில் நமக்கென வலைப்பதிவை உருவாக்கி கருத்துகளைப் பதிவிட்டு வருகிறோம். ப்ளொக்கரில் பதிவிட இணையவசதி இருக்கும் கணினியிலே தான் பயன்படுத்த முடியும். மொபைல் மற்றும் டேப்ளட் பிசி (Tablet Pc) போன்ற இணையத்தைப் பயன்படுத்தக் கூடிய கருவிகளில் வலைப்பூக்களைப் பார்க்க முடிந்தாலும் ப்ளொக்கர் தளத்தைப் பயன்படுத்தி புதிய பதிவுகளை இடும் வசதியின்றி இருந்தது. தற்போது கூகிள் அதிகாரப்பூர்வமாக பிளாக்கர் தளத்தை ஆப்பிள் நிறுவனத் தயாரிப்புகளான IOS இல் இயங்கும் ஐபோன், ஐபேட்களில் இயங்கக் கூடிய வண்ணம் செயலியாக வெளியிட்டுள்ளது.

Blogger app for iOS :

இந்தப் ப்ளொக்கர் செயலியை ஐபோன் ஐபேடில் நிறுவி புதிய பதிவுகளைப் பதிவிட முடியும். டிராப்ட் ஆக பதிவுகளைச் சேமித்தும் வைக்கலாம். நீங்கள் கணினியில் பதிவை அடித்து வைத்து பாதியில் வைத்திருந்தாலும் மிச்சத்தை இதிலிருந்தே Edit செய்து வெளியிடலாம். இவை இணையத்தில் Sync ஆகிக்கொள்வதால் இரண்டிலும் பயன்படுத்தலாம். இந்த செயலியில் பிளாக்கரின் புதிய வெர்சன் பயன்படுத்தப் பட்டுள்ளது.

புகைப்படங்களை அப்லோட் செய்வதும் எளிதானது. உங்கள் கேலரியில் இருக்கும் புகைப்படங்களை ஏற்றலாம் அல்லது புதிய புகைப்படங்களை நேரடியாக கேமராவின் மூலம் எடுத்தும் அப்லோட் செய்யலாம். மேலும் பதிவுகளுக்கு Label மற்றும் Location சேர்க்கும் வசதியும் இருக்கிறது.

இதனை iOS பதிப்பு 3.2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிப்புகளைப் பயன்படுத்துபவர்கள் அப்பிளின் Appstore லிருந்து தரவிறக்கிப் பயன்படுத்தலாம். இந்த செயலியின் இடைமுகம் (User interface) தற்போது ஆங்கிலத்தில் தான் இருக்கும். மற்றபடி நமது மொழிகளில் பதிவிட எந்தத் தடையும் இல்லை.

இதில் வாசகர்களின் கமெண்ட்களை பார்ப்பதற்கும், Comment Mo deration செய்தவர்களுக்கு அதனைப் பார்த்து வெளியிடுவதற்குமான வசதி தற்போது இல்லை என்பது வருத்தமான விடயம்.

தரவிறக்கச்சுட்டி: http://itunes.apple.com/us/app/blogger/id459407288

கணினி மூலை

பத்துப் பேரைப் பலிகொண்ட

# கோரமான ரயில் விபத்து குறித்து ஆராய ரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது

(புதுடில்லி)

அரக்கோணம் அருகே சித்தேரியில் நடந்த ரயில் விபத்து குறித்து, தெற்கு மண்டல ரயில்வே பாதுகாப்பு அதிகாரி எஸ்.கே.மித்தல் தலைமையில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரை - வேலூர் கன்டோன்மென்ட் புறநகர் மின்சார ரயிலும், அரக்கோணம்-காட்பாடி பாசஞ்சர் ரயிலும் சித்தேரியில் மோதிக் கொண்டதில், பத்து பயணிகள் பலியாகினர் 65 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து குறித்த விசாரணைக்கு ரயில்வே உத்தரவிட்டுள்ளது.தெற்கு மண்டல ரயில்வே பாதுகாப்பு அதிகாரி எஸ்.கே.மித்தல் தலைமையில் விசாரணை நடத்த, ரயில் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. விரைவில் மித்தல் தலைமையிலான குழு, விபத்துக்கான காரணம் குறித்த அறிக்கையை வெளியிடும்.

ரயில்வே அமைச்சக தகவல் தொடர்பாளர் அனில்குமார் சக்சேனா குறிப்பிடுகையில், “சிக்னல் கோளாறு மற்றும் வேக நடைமுறையை பின்பற்றாமை ஆகியவை இந்த விபத்துக்கான காரணம் என, ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனினும், மித்தல் தலைமையிலான குழு தீர விசாரித்து, விபத்துக்கான உண்மையான காரணத்தை தெளிவுபடுத்தும் என்றார்

இந்தியச் செய்திகள்

## தி.மு.க தனித்துப் போட்டி

(சென்னை)

நடைபெற உள்ள உள்ளூராட்சி தேர்தலில், தி.மு.க.தனித்துப் போடடியிடவுள்ளதாக கட்சி தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது, நாடாளுமன்ற மற்றும் சட்டசபை தேர்தல்களில் மட்டும் கட்சி கூட்டணி அமைத்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்



ஒரிசா மாநிலம் கேந்ரபரா மாவட்டத்தில் வீட்டிற்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் வீட்டின் கூரை மீது குடும்பத்தினர் ஏறியுள்ளதைக் காணலாம்.

## ரஜினியிடம்அடிவாங்குவதே தனது இறுதி இலட்சியமாம்



(சென்னை)

“தமிழ் சினிமாவின் துரோணாச்சாரியாராக விளங்குபவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். ஒரு திரைப்படத்திலாவது அவருககு வில்லனாகி அவர் கையால் அடிவாங்க ஆசைப்படுகிறேன். அன்று தான் என்னுடைய சினிமாப். பயணம் பூர்த்தியடையும் என்று தெரிவித்துள்ளார் அஜீத் குமார்.

சூப்பர் ஸ்டாரை நான் தூரத்திலிருந்து பார்த்து ரசித்தபடி படங்கள் பண்ண ஆசைப்படுகிறேன்.

ரஜினி சார் நடிக்க 'வேண்டும். அவர் படத்தில் நான் வில்லனாக நடிக்க வேண்டும். அவர் கையால் நான் அடி வாங்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

இது என்றைக்கு நடக்கிறதோ, அன்று என் சினிமா பயணம் ஒரு முழுமையடைந்ததாக சந்தோஷப்படுவேன். இதுதான் என் லட்சியம். மங்காத்தாவின் மாபெரும் வெற்றியை ரஜினி சாருக்கு சமர்ப்பிக்கிறேன்'' என்று கூறினார்.

## சிறந்த நிர்வாகி நரேந்திரமோடி

(வொஷிங்டன்)

அமெரிக்க பயணத்துக்கு விசா மறுக்கப்பட்ட குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, நிர்வாக திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று அமெரிக்க நாடாளுமன்ற ஆராய்ச்சி அமைப்பு இப்போது தெரிவித்துள்ளது. 2002 ஆம் ஆண்டின் குஜராத் கலவரத்துக்கு பிறகு முதலீடு திரட்டவும், அமெரிக்க வாழ் குஜராத் மக்களை சந்திக்கவும் திட்டமிட்ட நரேந்திர மோடிக்கு அமெரிக்க அரசு விசா மறுத்தது. இந்நிலையில், அந்நாட்டு எம்.பி.க்களின் விருப்பமான உலக நடப்புகள் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து நாடாளுமன்றத்துக்கு அளிக்கும் சி.எஸ்.ஆர் அமைப்பு, நரேந்திர மோடியை பாராட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது. 6 கோடி மக்கள் வசிக்கும் குஜராத் மாநிலத்தின் சிறப்பான வளர்ச்சியை அந்த மாநில முதலமைச்சர் உறுதி செய்துள்ளார். பொருளாதார நடைமுறைகளை சீர்படுத்தி, சிவபபு நாடா முறையை மாற்றி, நிர்வாகத்தில் ஊழலைக் கட்டுப்படுத்தி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கும் மாநிலமாக குஜராத்தை உருவாக்கியுள்ளார்.

சிறந்த நிர்வாக திறனுக்கு மோடி ஒரு எடுத்துக்காட்டு என்று அதில் கூறப்பட்டுள்ளது. 100 பக்கங்களை கொண்ட அந்த அறிக்கையில், 2014 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் வேட்பாளராக மோடியும் ராகுல் காந்தியும் இருக்க வாய்ப்புள்ளது.

எனினும், மோடியை ஐக்கிய ஜனதா தளம் உட்பட தே.ஜ. கூட்டணி கட்சிகள் ஏற்குமா என்பது சந்தேகமே என்றும் கூறப்பட்டுள்ளது. 2012 குஜராத் சட்டசபை தேர்தலில் மோடி மீண்டும் வெற்றி பெறுவது எளிதான விடயம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோல் விலையை அதிகரிக்க தீர்மானம்

(புதுடில்லி)

பெற்றோல் விலையை லிற்றருக்கு மூன்று ரூபாய் வரை அதிகரிக்க பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

பெறறோல் விற்பனையைப் பொறுத்தவரை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு தினமும் 15 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்படுகிறது. இது தவிர வரிகளும் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு தற்போது வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்க்கு அதிக விலை செலுத்த வேண்டியுள்ளது. எனவே பெறறோல் விலையை லீற்றருக்கு மூன்று ரூபாய் வரை அதிகரிக்க பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

## காஷ்மீர் முதலமைச்சர் விவாகரத்து



(புதுடில்லி)

காஷ்மீர் முதல்வர் ஓமர் அப்துல்லா தனது மனைவியை விவாகரத்து செய்யவுள்ளார்

காஷ்மீர் மாநில முதலமைச்சர் ஓமர் அப்துல்லா. நாட்டின் மிகவும் கவர்ச்சியான அரசியல்வாதிகளில் ஒருவராவார். இவரது மனைவி பாயல் நாத் என்பவராகும். இவர்களுக்கு திருமணமாகி 17 வருடங்களாகிறது. இவர்களுக்கு இரு ஆண் பிள்ளைகள் உள்ளனர். ஓமர் அப்துல்லா முதல் அமைச்சராக பதவி ஏற்றதில் இருந்தே இவரது மனைவி புதுடில்லியிலேயே தங்கி வருகிறார். ஓமர் மற்றும் பாயலின் இருவரும் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் பிரிந்து கொள்ளலாம் என முடிவு எடுத்து உள்ளதாக கூறப்படுகிறது. எனவே ஓமர தனது மனைவி பாயலை விரைவில் விவாகரத்து செய்யவுள்ளார். பின்னர் தனது கட்சியை சேர்ந்த நசீர் அஸ்லம் தங்கையை மணக்க இருக்கபதாக கூறப்படுகிறது.





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



ஐந்தாவது அகவையில்

பெயர்: ஆர். ஹரித்ரா
முகவரி : மினேஸ்டா ஸ்ருடியோ, கோப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................... பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## பின்னணிப் பாடகி எல்.ஆர். ஈஸ்வரிக்கு பாராட்டு விழா நடத்துவதற்கு ஏற்பாடு

(சென்னை)

50 ஆண்டுகளுக்கும் மேலாக இசைத் துறையாற்றி வரும் பிரபல பின்னணி பாடகி எல்.ஆர்.ஈஸ்வரிக்குப் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

1958 ஆம் ஆண்டு நல்ல இடத்து சம்மந்தம் என்ற படத்தில் “இவரே தான் அவர்... அவரே தான் இவர்...” என்ற பாடல் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். பின்னர் 1961 ஆம் ஆண்டு வெளிவந்த ”பாசமலர்” படத்தில் ”வாராயோ தோழி வாராயோ...” என்ற படத்தின் மூலம் பிரபலமானார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம் என்று பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இது தவிர சினிமா அல்லாத பக்தி பாடல்கள் ”தாயே கருமாரி..”, ”செல்லாத்தா செல்ல மாரியத்தா...” உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக பக்தி பாடல்களையும் பாடியுள்ளார். கலைமாமணி விருது, எம்.ஜி.ஆர். விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மாநில விருதுகள், இதுதவிர வெளிநாடுகளில் வாங்கிய பல விருதுகள் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 50 ஆண்டுகளாக இசைப் பணியாற்றி வரும் எல்.ஆர்.ஈஸ்வரியை பாராட்டி, ஸ்ரீதேவி பைன் ஆர்டஸ் மற்றும் சாதக பறவைகள் குழு சேர்ந்து அவருக்கு, “பாட்டு ராணிக்கு பாட்டு திருவிழா” என்ற விழாவை நடத்தவுள்ளனர். இந்த விழா வருகிற 25 ஆம் திகதி சென்னை காமராஜர் அரங்கத்தில் நடை பெறவுள்ளது. இந்தவிழாவிற்கு பிரபல சினிமா நட்சத்திரங்கள், பின்னணி பாடகர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்க இருக்கின்றனர்.

# பிரேசிலின் சுற்றுலாத்துறை அமைச்சரும் இராஜிநாமா

உலகச் செய்திகள்

பிரேசிலின் சுற்றுலாத்துறை அமைச்சர் பெட்ரோ நொவைஸ் தமது பதவியை இராஜினமாச் செய்துள்ளார். அரசாங்கத்துக்குச் சொந்தமான நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக வெளியான குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் அவர் பதவி விலகியுள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர், பாதுகாப்புக் கருதி தாம் பதவி விலகுவதாக அறி வித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் பிரேசில் அமைச் சரவையிலிருந்து பதவி விலகியுள்ள நான்காவது அமைச் சராக இவர் கருதப்படுகின்றார். அமைச்சர்களின் தொடர் இராஜினாமா மூலம் அரசாங்கம் ஊழல்களில் பயணித் துக்கொண்டிருக்கின்றமை புலனாவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

# தடுக்கப்பட்ட அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள்

— ஈரான்

(தெஹ்ரான்)

ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரஜைகள் இருவரும் தற்போது விடுவிக்கப்பட மாட்டார்கள் என ஈரான் அறிவித்துள்ளது.

இவர்கள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமதி நிஜாத் தெரிவித்திருந்த நிலையில் இந்த விடயம் வெளியாகியுள்ளது. இருப்பினும் இன்னும் சிலகாலத்துக்கு இவர்களை தடுத்து வைக்குமாறு ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரானுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டு இவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்காவும் ஈரானும் தொடர்ந்தும் முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்திவரும் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடாபிக்கு எதிரான போருக்கு ஆயுத உதவி வழங்கக் கோரிக்கை


(திரிபோலி)

கடாபிக்கு எதிரான போருக்கு ஆயுத உதவி வழங்குமாறு தேசிய மாற்றத்துக்கான பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

லிபிய தலைவர் முஅம்மர் கடாபியின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பிராந்தியங்களையும் கைப்பற்றுவதற்கு தமக்கு ஆயுத உதவிகளை வழங்குமாறு தேசிய மாற்றப்பேரவை கோரியுள்ளது.

லிபியாவின் தென் பகுதியில் மறைந்துள்ள முஅம்மர் கடாபி தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டமிட்டுவருவதாக தேசிய மாற்றத்துக்கான பேரவையின் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலில் தெரிவித்துள்ளார். இதனிடையே லிபியக் கிளர்ச்சியாளர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிய பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஸி திரிபோலிக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தமக்கு எதிரான குற்றச்செயல்களை தடுத்து நிறுத்துமாறு, ஐக்கிய நாடுகள் சபையிடம் முஅம்மர கடாபி கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன





எகிப்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள துருக்கி பிரதமர் ரிசெவ் தயீப் எர்டோகன் (இடது அந்நாட்டில் உள்ள புனித பேராலயத்தின் 2அம் பேப் ஷேனுடாவை சந்தித்தார்.

# மியன்மாரில் நேர்மையான முறையில் மறுசீரமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்

- அமெரிக்கா வலியுறுத்து

(மியன்மார்)

மியன்மார் தலைவர்கள் நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியின் பங்களிப் புடனும் நேர்மையான முறையில் மறுசீரமைப்பை ஏற்படுத்த வேண்டுமென் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் சிறைவைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான அரசியல் கைதிகளை விடுவிக்க மியன்மார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் முலமே தமது நாட்டுக்கும், மியன்மாருக்கும் இடையிலான உறவுகளை முன்னேற்ற முடியும் என அமெரிக்காவின் விசேட பிரதிநிதி டேரீக் மிச்சேல் தெரிவித்துள்ளார். மியன்மாருக்கு ஆறு நாள் விஜயம் மேற்கொண்ட மிச்சேல் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆங் சான் சூகி தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்களை சந்தித்திருந்தார்.

எனினும் இராணுவத்தினரின் ஆதிக்கம் காணப்படும் மியன்மாரின் ஜனாதிபதி தேய்ன் செய்யினை, மிச்சேல் சந்திக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சிறைவைக்கப்பட்டுள்ள இரண்டாயிரம் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், எதிர்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் மியன்மார் அரசாங்கத் தினை அவர் வலியுறுத்தியுள்ளார்.

வட கொரியாவுடன், மியன்மார் கொண்டுள்ள இராணுவ உறவுகள் குறித்து அமெரிக்கா தனது கவலையை வெளியிட்டுள்ளதாக சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயங்கள் குறித்து மியன்மார் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை முன்னேற்ற முடியும் எனவும் மிச்சேல் குறிப்பிட்டுள்ளார்.

15 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகியை, கடந்த மாதம் ஜனாதிபதி தெய்ன் செய்யின் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். எனினும் அரசியல் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படும் வரை மியன்மாருக்கு எதிராக விதித்துள்ள தடைகளை அமெரிக்கா நீக்காது என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

# பதிவிருக்கப் பெட்டகம்

பெரும்பான்மையான சிங்களவர்களும், தமிழர்களும் தங்கள் சகோதரர்களைக் கொல்வதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவர்கள். ஆனால் இப்படி பரஸ்பரம் வெறிகொண்டதான ஒரு சூழலின் தோற்றம் எவ்விதம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது? திட்டமிட்டு அரங்கேற்றப்படும் வன்முறைகளின் உணர்ச்சிக் கொந்தளிப்பான சூழலில் பொதுவான மனித அறம் அழிக்கப்பட்டு விடுகிறது. கொலையையும் அழிவையும் நியாயப்படுத்தும் கற்பிதங்கள் வெற்றிபெறுகின்றன. நம் மத்தியில் உள்ள உண்மையான அறிவாளிகள், படிப்பாளிகளின் குரல்கள் வெளிவராவணணம் செய்யப்பட்டுள்ளன. சிங்களத் தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம் என்ற இரண்டு பெரும் தீமைகளுக்கிடையே ஒரு கட்டத்தில் ஏதேனும் ஒரு தரப்பைச் சார்பவர்களாக அவர்களது மனசாட்சியும சுருங்கிவிடுவதுதான் இக்காலகட்டத்தின் மிகப்பெரும் துயரம். சிங்களத் தேசியவாதத்தின் குற்றங்களைப் போலவே தமிழ்த் தேசியவாதத்தின் குற்றங்களும் மன்னிக்கப்பட முடியாதவை. ஒரு தந்திரோபாயமாகக் கூட, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இது தேவை என்று சொல்லிக் கொண்டு கூட, பாதிக்கப்படும் தரப்பை முற்றுமுழுதாக விமர்சனமற்ற முறையில் ஆதரித்து நிற்பது முற்போக்காக இராது. அத்தகைய இழப்பின் இறுமாப்பின் மீது கட்டியெழுப்பப்படும் ஆதரவுகள் புதிய ஒடுக்குமுறைச் சக்திகளுக்கே வழிவகுத்திருக்கின்றன என்பது வரலாறு.

– மனுஷ்யபுத்திரன்

தீவிர வன்முறை வீரமாக ஏற்கப்படக் கூடியதுதான் என்று நம்புகிற ஒரு மனநிலையில் இருக்கின்ற மிகச் சில சமூகங்களில் ஒரு சமூகமாக நாமும் இருக்கிறோம்.

– அசோகமித்திரன்

சட்டத்துக்குப் புறம்பான, சட்டத்துக்கு அப்பாற்பட்ட வழவத்தை தனது வன்முறை நடவழக்கைக்குப் பயன்படுத்தும் ஒருவர் எதிராளியையும் அதேவிதமான சட்டத்தை மீறிய வன்முறையில் ஈடுபடும் படி நிர்ப்பந்திக்கிறார். இதுதான் பயங்கரவாதத்தின் அழப்படை.

– நோம் சோம்ஸ்கி

மனிதனிடம் ஏதோ வழவத்தில் கொலைவெறி இருக்கிறதெனபது சாதாரணமானதுதான். போலி கௌரவத்துக்காக அதைச் செய்ய ஒரு மனிதன் துணியும்போது அதைப் பாராட்டும் சமுதாயத்தைப் பற்றித்தான் வருந்த வேண்டியிருக்கிறது.

– புதுமைப்பித்தன்

கொள்கை மனிதரின் தேவைக்காகவே அன்றி, கொள்கையின் தேவைக்காக மனிதர் இல்லை. கொள்கைக்காக ஒருவர் உயிர்ப் பலியாவதை தியாகம் என்று கொண்டாடுவது, அவரைத் தெய்வப்பிறவி என்று வஞ்சகமாகப் பாராட்டிச் சாகடிப்பதுதான். அவரே விரும்பி மக்களுக்காகச் சாகிறார் என்று சொல்லுவது, பச்சை மோசடி. தியாகம் என்பதன் மீது இல்லாத பொல்லாத தெய்வத்தன்மைகளை ஏற்றிவைத்து, நமது சுயநலத்துக்காக ஒருவரை விரும்பிச் சாகும்படி தூண்டிவிடுவதுதான் அது.

– நாஞ்சில் நாடன்

ஒரு சிறு குழுவிடம் எல்லாப் பொருள்கள் பற்றியும் கருத்தொற்றுமை ஏற்பட்டால் அவர்கள் மனதில் பாசிசம் குடியிருக்க வருகிறது. ஒரு பொருள் பற்றி எல்லாத் தரப்புகளிலும் கருத்தொற்றுமை ஏற்படும்போது பாசிசம் சமூகத்தில் கால்பதிக்கிறது. சந்திரனின் இருண்ட பாகத்தைப் பற்றிய விழிப்புணர்வும் விவாதமும் ஜனநாயக மரபிற்கு இன்றியமையாதது.

– கண்ணன்

களப்பிரர் முதல் வடுவர், பறங்கி வெள்ளையன் வரை வாளோடு தோன்றிய மூத்தகுடி மீது படையெடுத்து வந்தவர் எவருமே தோற கடிக்கப்பட்ட வரலாறே இல்லையென்ற போது, பாடல் பெற்ற தமிழ வீரம் உண்மையில் என்ன என்ற சின்னமங்கலம் பாண்டியனின் கேள்விக்கு நம் மரபில் பதிலே இல்லை.

– ப. சிங்காரம்

வேறு எந்தக் காரணத்தாலும் பிழைக்க முடியாதவர்களும், ஒழுக்கமும் நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசிய வியாபாரத்தை விடச் சுலபமான வழி வேறு ஒன்றும் இல்லை.

– ஈ.வெ.ராமசாமி (1935 'குடியரசு' தலையங்கத்தில்)

சட்ட மறுப்பு, சட்டம் மீறிய போராட்ட வழவங்கள் என்பன ஆயுதம தாங்கிய சிறு முன்னணிப் படையால் நடத்தப்படுவது என்பதை மாற்றி, பரந்துபட்ட மக்களைச் சட்டம் மீற வைத்ததே காந்தி வழி. மக்களின் மீது அதிகாரம் உள்ள முன்னணிப்படை (vanguard) என்கிற கருத்தாக்கம் அதன்மூலம் அழிந்தது. அனைவரும் அதில் படைவீரர்களே. துயரைத் தாங்குதல், அதேநேரத்தில் அதிகாரத்தை எதிர்த்தல் என்பதே காந்தியடிகளின் கொள்கை. அரசியலில் நேர்மை (Ethical Politics), அனைவரையும் உள்ளடக்குதல் (inclusive approach) என்பன காந்தியத்தின் உயரிய பண்புகள். பல்வேறு அனுபவங்களை எல்லாம் கணக்கில் எடுக்கும்போது இவற்றை நாம் அவ்வளவு எளிதாகப் புறக்கணித்துவிட இயலாது. இது குறித்து விவாதங்கள் அவசியம்.

– அ. மார்க்ஸ்

# இலங்கையில் 10 பேரில் ஒருவர் மனநோயினால் பாதிப்பு

## - தேசியமன ஆரோக்கிய நிறுவகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வாழும் மக்களில் 10 பேரில் ஒருவர் சில வகையான மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய மன ஆரோக்கிய நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்த கணிப்பீடு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய மன ஆரோக்கிய நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் மன நோய் பரவுவதற்கு 30 வருட கால யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் போன்றனவே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 100 இலங்கையருக்கு இருவர் என்ற விகிதத்தில் தீவிர மன நோய்களுக்கு ஆளாவர் என இந்நிறுவகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நோய்களுக்கு சிகிச்சை பெறுவதன் மூலம தீர்வு காண முடியும் என தேசிய மன ஆரோக்கிய நிறுவகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மன நோயாளர்கள் 1333 என்ற உதவி தொலைபேசியின் ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும். இதன் மூலம் உளவியல் ஆதரவுகளுக்காக சிறந்த, நம்பகத் தன்மையான ஆலோசனைகள் வழங்கப்படும். இது போன்ற சேவைகளை மன நோய்க்கான தேசிய நிலையத்திடம் பெறுவதற்கு 011-3140844 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொள்ள முடியும். இந்நோயகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு காண்பதற்காக உளவியல் ஆதரவுக்கான தேசிய சபை மற்றும் சுமித்ராயோ போன்றவற்றை நாட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் சட்டத்தை மீறிய 48பேர் இதுவரை கைது


(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட 5 வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தலுடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளில் 22 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தவருடத்தில் இதுவரை மின்னல் தாக்கி 30 பேர் மரணம்



(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையில் மின்னல் தாக்கியதன் காரணமாக 30பேர் மரணமாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 2010 ஆம் ஆண்டு மின்னல் தாக்கியதன் காரணமாக 34 பேர் மரணமடைந்ததாகவும் 300 மில்லியன் ரூபா வரையிலான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மின்னல் தாக்குதல் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானது எனவும் ஊடகங்கள் ஊடாக மின்னல் தாக்கம் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கி வருகின்ற போதும், அந்த வசதிகள் இல்லாத கஷ்டப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்

# பல்கலைக்கழக புத்தாக்குநர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற புத்தாக்குநர்களின் புதிய கண்டுபிடிப்புக்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் உள்ள புத்தாக்குநர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றில் புதிய ஆய்வுகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் இந்த வேலைத் திட்டத்தில் இணைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சரணாலய சுற்றுலா பயணிகளுக்கு இணையம் ஊடாக நுழைவுச்சீட்டு

(கொழும்பு)

தேசிய சரணாலயங்களை பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு இணையத்தளம் ஊடாக நுழைவுச் சீட்டுக்களை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளும் வழிமுறையை அறிமுகப்படுத்துவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சரணாலயங்களை பார்வையிட வருகின்ற மக்கள் இதன் மூலம் நுழைவுச்சீட்டிற்காக வரிசையில் காத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட மாட்டாதென வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் எச்.டீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் சரணாலயங்களில் உள்ள தங்கும் விடுதி களை முன்கூட்டியே ஒதுக்கிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத் திக்கொடுக்கப்படவுள்ளது. யால சரணாலயத்தை பார்வையிட் வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்காக இந்த திட்டத்தின் முதல் கட்டம் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத தேர்தல் பிரசாரம் அதிகளவு முறைப்பாடுகள் பதிவு

## - கபே அமைப்பு தகவல்

(கொழும்பு)

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பான சம்பவங்களே அதகளவில் பதிவாகி வருவதாக தேர்தலைக்கண்காணிக்கும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 36 சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பான சம்பவங்களே அதிகம் பதிவாகிவருகின்றன.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதான காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையிலான பிரசாரங்கள் குறித்தே கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம். இரத்தினபுரி, குருநாகல் அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மாநகர சபைப் பிரவுகளில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையிலான பிரசார நடவடிக்கைகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை அகற்றப்படாத நிலையில் பிரசார நோக்கிலான பதாகைகளும் கட்அவுட்களும் பெருமளவில இந்த பிரதேசங்களில் இன்னும் காணப்படுகின்றன.

# யுவதியின் சடலம் மீட்பு

யக்கலமுல்ல, நாரங்கவலவத்த பகுதியில் கற்குழியொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த யுவதி ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

சடலம் கட்டில் விரிப்பொன்றில் சுற்றப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடெகலந்த பகுதியைச் சேர்ந்த 17 வயதான யுவதி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் இந்த யுவதி காணாமல் போயிருந்ததாக .:. யுவதியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். யுவதியின் சடலம் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரண விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றன.

# ஆபாச வீடியோக்களை விற்ற மூவர் கைது

வெலிகந்தை செவனபிட்டிய பகுதியில் ஆபாச வீடியோக்களை விற்றதாகக் கூறப்படும் மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஆபாச வீடியோ இறுவட்டுக்கள், அவற்றைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணினி உள்ளிட்ட ஒருதொகை உபகரணங்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களை பொலன்னறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

# சூழலுக்கு மாசு விளைவிக்காத "மிரகல்" எரிபொருள் அறிமுகம்

(கொழும்பு)

சூழலுக்கு பெரும் மாசு ஏற்படுத்தாத எரிபொருள் வகையொன்று "மிரகல்" என்ற பெயரில் நேற்றுமுன்தினம் சந்தையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இது குறித்த தகவலறிக்கை போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு, அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

குறித்த மிரகல் எரிபொருளை விநியோகிக்கும் நிறுவனத்தின் தலைவரான நாலக கஜதீர நிகழ்வில் உரையாற்றுகையில், புதிய எரிபொருளை முதலில் இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தொடருந்து திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

# யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் இரும்பு விற்பனை அதிகரிப்பு

யுத்தம் நடைபெற்ற பகுதிகளான முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் பழைய இரும்புக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைக் கொள்வனவு செய்ய தெற்கிலிருந்து அதிகளவு வியாபாரிகள் வருகை தருகின்றனர்.

தெற்கு வியாபாரிகள் அதிகளவானோர் வடக்கிலிருந்து ஒரு கிலோகிராம் இரும்பை 50ரூபாவிற்கு வாங்கி தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

யுத்த காலப் பகுதிகளில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிரதேசங்களில் அழிக்கப்பட்ட பொருட்களிலிருந்து பழைய இரும்புகளை சேகரித்து விற்பது இப் பகுதியில் பிரதான வருமானம் ஈட்டும் தொழிலாக மாறிவருகிறது.

இந்நிலைமையின் கீழ் பாதுகாப்பு பிரிவிற்கு உரித்தான வாகனங்கள் மற்றும் வெடிபொருட்கள் ஆகியவற்றிலிருந்து இவ்வாறு இரும்பு சேகரிக்கப்படுகிறது.

இத்தகைய முறையில் பெறப்படும் இரும்புப் பொருட்களை தெற்கு வியாபாரிகளுக்கு விற்பது தடை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சிறார் இல்லங்களை ஆராய அதிகாரிகள் குழு நியமனம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாகவுள்ள சிறார் இல்லங்கள் குறித்து ஆராய்வதற்கு உரிய அதிகாரிகளை நியமித்துள்ளதாக தேசிய சிறார் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஆலோசனைகளை முன்வைப்பதற்கு விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து சிறார் இல்லங்கள் குறித்தும் துரிதமான பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

அண்மையில் தீப்பரவல் காரணமாக குழந்தையொன்று பலியான நிட்டம்புவ சிறார்கள் இல்லத்தில் மேலும் 4 சிறார்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்கள் வெளியேற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

காலி நகர் கராபிட்டிய பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வரும் 30 வரையான முஸ்லிம் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பதின்மூன்று கட்டடங்களில் வாழ்ந்து வரும் சுமார் முப்பது குடும்பங்களை சேர்ந்த முஸ்லிம் குடும்பங்களும் ஒரு சிங்கள குடும்பமும் நீதியமைச்சரிடம் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து நீதியமைச்சர் ஹக்கீம் சம்பந்தபட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வாழும் முஸ்லிம், சிங்கள குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது இருந்த போதும் குறித்த குடும்பங்கள் வெளியேறவில்லை.

அந்த குடும்பங்களுக்கு இந்த மாதம் ஆம் திகதியுடன் தமது வீடுகளில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த குடும்பங்கள் நீதியமைச்சரை சந்தித்து முறையிட்டதை தொடர்ந்து அமைச்சர் மேற்கொண்ட முயற்சியால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை நீதியமைச்சர் மேற்கொள்வதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மரணப் பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆவணி மாதத்தில் யாழ். மாவட்டத்தில் சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து ஓய்வூதியம் பெறும் முன் மரணமானவர்கள் நால்வருக்கான மரணப் பணிக்கொடை அவர்களது குடும்பத்தவர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக சமூக பாதுகாப்புச் சபை ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே இவை உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனுடன் குறித்த மாதத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதிபெற்ற 5 பேருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் இதுவரை 10 பேருக்கு மரணப் பணிக்கொடையும், 22 பேருக்கு ஓய்வூதியமும் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். சமூக பாதுகாப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

6000 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் சுயதொழிலாளர்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு குறித்த ஓய்வூதியத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியுமென யாழ். செயலக சமூக பாதுகாப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர். (பா)

## தபால் பெட்டி எங்கே தேடி அலையும் மக்கள்

நெல்லியடி பஸ் நிலையத்தின் முன்னால் உள்ள தபால் பெட்டி வாகனத் தரிப்பினால் பயன்படுத்த முடியாதுள்ளதாக மக்கள் குறைகூறுகின்றனர். அத்துடன் இந்தத் தபால் பெட்டி இருக்கும் இடமே தெரியாமல் பொதுமக்கள் சிலர் அலைகின்றனர். தபால் பெட்டி அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளமையினாலும் அப்பகுதியில் மலசலம் கழிக்கப்படுவதாலும் தபால் பெட்டியை மக்கள் பயன்படுத்த முடியாதுள்ளதாக குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(18)

# கழிவறையை எட்டிப்பார்த்தார் சுத்திகரிப்பாளருக்கு அபராதம்

துபாயிலுள்ள வர்த்தக தொகுதியொன்றின் பெண்கள் கழிவறைத் தொகுதிக்குள் பிலிப்பைன்ஸ் பெண் ஒருவரை எட்டிப் பார்த்தார் என்ற குற்றச் சாட்டில் இலங்கையைச் சேர்ந்த சுத்திரிகரிப்பாளர் ஒருவருக்கு துபாய் நீதிமன்றம் அண்ணளவாக 60,000 இலங்கை ரூபா அபராதம் விதித்துள்ளது.

தான் கை கழுவிக்கொண்டிருந்தபோது இந்நபர். கதவுக்கு மேலாக எட்டிப்பார்த்ததை அரேபிய பெண்ணொருவர் கண்டதாக பிலிப்பைன்ஸ் பெண் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆண் ஒருவர் எட்டிப்பார்த்தமை குறித்து அரேபிய பெண் கதவைத் தட்டி தனக்கு தெரிவித்ததாகவும் அப்போது மேற்படி நபர் கழிவறையொன்றில் ஒளிந்து கொண்டதாகவும் பிலிப்பைன்ஸ் பெண் தெரிவித்தார்.

அந்நபரை வெளியே வருமாறு கத்தினேன். அவர் என்னை படம் எதுவும் பிடிக் கவில்லை என்பதை உறுதிப்படுத்தினேன். அதன்பின் நாம் பொலிஸில் முறைப்பாடு செய்தோம் என அப்பெண் கூறினார்.

## விசாரணைக்கு....

நடவடிக்கையும் பொறுப்புக்கூறும் நடவடிக்கையை வெட்கக்கேடானதாக்கிவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் இது என்று அனைத்துலக மன்னிப்புச் சபையும் வலியுறுத்தியுள்ளது. தருஸ்மன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம் சரிபி தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் நீதிக்காக மிக நீண்டகாலம் காத்திருந்துவிட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## நிலையான....

இடையிலான உறவானது வரலாற்று ரீதியிலும் மிகவும் பலம் வாய்ந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்கள் தொடர்பில் பிரித்தானியாவின் நிலைப்பாடு என்ன என எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

யுத்தத்துக்கான காரணங்களை தேடிக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்து நாட்டில் நீண்ட கால சமாதானத்துக்கு வழி செய்ய இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் என தெரிவித்த அவர், இலங்கைக்கு பிரித்தானியாவின் ஆதரவு எப்போதும் கிடைக்கப்பெறும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொஸ்கோ மாணவி...

வித்தியாலயத்தின் கு.கஜனி, சூ.துவாரகன் ஆகிய இருவரும் 190 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் நான்காவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 217 மாணவர்களில் 213 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பா.பவதாரகன் 190 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், சி.தனலக்ஷன் 187 புள்ளிகளைப் பெற்று 11ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். இப்பாடசாலையிலிருந்து தோற்றிய 266 மாணவர்களில் 111 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இணுவில் மத்திய கல்லூரியில் பு.கார்த்திகாயினி 175 புள்ளிகளையும், சி.பிரவீனா 166 புள்ளிகளையும், அ.கிருஜன் 152 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

நல்லூர் சதானந்தா வித்தியாலயத்தில் தனுசா 167 புள்ளிகளையும், வ.றொசான் 147 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய 89 மாணவர்களில் 23 பேர் சித்தியடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை தேசியரீதியாக புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியாக 195 புள்ளிகளை மூவர் பெற்றுள்ளனர் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அந்த மாணவர்கள் விபரம் வருமாறு:-

நிதிமி ரணவீர - மிரிஸ்வத்தை மகாவித்தியாலயம், சசிபிரபா பொன்சேகா - களுத்துறை மகளிர் வித்தியாலயம், நலீம் பாத்தி - கெக்கிராவை முஸ்லிம் மகாவித்தியாலயம்.

## றொபேட் ஓ பிளேக்...

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற பல்வேறு முன்னேற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டிருப்பதானது வரவேற்கத்தக்கது. இப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடரவேண்டும் என பிளேக் தெரிவித்ததாக அமைச்சர் கூறினார்.

மெனிக்பாம் முகாமில் இடம்பெயர்ந்தவர்கள் குறைந்துள்ளதன் மூலம் மீள் குடியேற்றம் சிறப்பாக இடம்பெற்றுள்ளமை மற்றும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை போன்றவற்றை அமெரிக்கா வரவேற்பதாகவும் இலங்கையின் இந்த முயற்சிக்கு அமெரிக்கா மேலும் உதவும் வகையில் 20 மில்லியன் டொலரை வழங்கவும் பிளேக் இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## கபடநோக்கில் செய்யும்...

இவைகள் உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதும், எம்மீது அவதூறு பரப்புவதுமான ஓர் திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட செயலாகும் என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

எமது கட்சி உறுப்பினர்கள் ஆயுதங்கள் வைத்திருப்தாகவோ, ஆயுதங்களால் எவரையும் அச்சுறுத்தியதாகவோ எமது மக்களிடம் இருந்து எந்த வித புகார்களும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால் றொபேட் ஓ பிளேக் அவர்கள் அதை ஆதாரபூர்வமாக நிரூபித்தாக வேண்டும்.

இது தவிர, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் 1990 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கில் கால் பதித்திருந்தோம். 1994 ஆம் ஆண்டிலிருந்து இறுதியாக 2010 ஆம் ஆண்டு வரை நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டு தமிழ் மக்களின் அரசியல் அங்கீகாரத்தை பலத்த சவால்களுக்கு மத்தியிலும் பெற்று வந்திருக்கின்றோம். அன்றிலிருந்து தொடர்ச்சியாக பதினேழு வருடங்களாக நாம் இன்று வரை நாடாளுமன்ற உறுப்புரிமைமையை பெற்றும் வந்திருக்கின்றோம்.

இறுதியாக 2010 இல் நடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது வடக்கு கிழக்கில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற ஒரேயோரு தமிழ்த் தலைவராக எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கே தமிழ் மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கியும் இருக்கிறார்கள்.

இது தவிர, இறுதியாக நடந்து முடிந்த யாழ்., கிளிநொச்சி மாட்டங்களுக்கான உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் நாம் பலத்த சவால்கள் மற்றும் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் 3 பிரதேச சபைகளை கைப்பற்றியிருக்கின்றோம். மூன்று சபைகளில் மிகவும் சொற்பமான வாக்கு வித்தியாசத்தில் அந்த சபைகளை வெற்றி கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்திருக்கின்றோம்.

தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையை தீராப்பிரச்சினையாக நீடித்துச் சென்று அதில் அரசியல் ஆதாயம் தேட விரும்பும் சுயலாப தமிழ்த் தலைமைகள் எம் மீதான அவதூறுகளை பரப்பி வருகின்றமை எமது மக்கள் அறிந்த விடயமாகும். இந்நிலையில் றொபேட் ஓ பிளேக் அவர்களும் எம்மை துணை இராணுவக்குழு என்றும், எம்மால் சமாதானம் தடைப்படுகின்றது என்றும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை பரப்பி வரும் செயலானது அவரது இராஜதந்திர செயற்பாடுகள் மீதான பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

சமாதானத்திற்காகவும், நடைமுறைச்சாத்தியமான வழிமுறையிலான கௌரவமான ஓர் அரசியல் தீர்விற்காகவும் எம்மை ஆதரித்து எமக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கியிருக்கும் தமிழ் மக்களின் விருப்பங்களை நிராகரிக்கும் றொபேட் ஓ பிளேக் அவர்களின் அவதூறான கருத்துக்களை நாம் கண்டிக்கின்றோம்.

எமது மக்களின் நிரந்தர அமைதிக்காகவும், அரசியலுரிமைச் சுதந்திரத்திற்காகவும் நாம் இழந்தவைகள் ஏராளம். அழிவுகளில் இருந்து எழுந்து நிமிர விரும்பும் எமது மக்களுக்கான நிரந்தர மகிழ்ச்சிக்காக றொபேட் ஓ பிளேக் அவர்கள் எதையும் ஆற்ற விரும்பினால் அதை மகிழ்சியுடன் வரவேற்போம். மாறாக எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்பும் எம்மீது இது போன்ற பொய்யான அவதூறுகளை உள்நோக்கத்தோடு திட்டமிட்டு பரப்புவது என்பது குழப்பங்களை விழைவிக்கும் கபட நோக்கங்களில் ஒன்றாகவே கருதப்படும் என்றும் ஈ.பி.டி.பி விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திப்பாணம்

**பிள்ளையைக் கிள்ளிவிட்டு பின்கதவால் எதிரியாய்**
**உள்நுழையும் அமெரிக்க உறவுமுறை - தள்ளியாம்**
**இலங்கைத் தமிழர்கள் இனியாகில் மீண்டுலகே**
**துலங்கிடத் துணிந்தனர் தனி!**




# மனித உரிமைக் கூட்டத் தொடரில்
# அரசுக்கு அதிகரிக்கிறது ஆதரவு

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசின் நிலைப் பாட்டுக்கு ஆதரவாகச் செயற்பட ஆபிரிக்க ஒன்றிய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஜெனீவா சென்றுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழு இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, ஆபிரிக்க ஒன்றியத்ததுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, இந்த இணக்கப்பாடு காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் மாநாட்டில் விவாதிக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராக செயற்பட இந்த நாடுகள் இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மண்முனையில் புதிய பாலம்
# ஜப்பானிய அரசு நிதியுவி



(கொழும்பு)

மட்டக்களப்பு மண்முனைப் பாலதகின் கட்டுமாண பணிக்காக ஜப்பான 1736 மில்லியன் நிதியுதவி அளித்துள்ளது என நிதித்திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது. 210 மீற்றர் நீளமும் 9.8 மீற்றர் அகலமுமாக இந்த பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு கிழக்கு கரையிலிருந்து மேற்கு கரைக்கு தற்போது 32 கிலோ மீற்றர் பயணிக்க வேண்டியிருப்பதாகவும் இந்த பாலம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 300 மீற்றர் தூரமே பயணிக்க வேண்டி இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# மருத்துவமனைகளுக்கு மின் பிறப்பாக்கிகள்

(கொழும்பு)

அத்தியவசிய சேவைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 16 வைத்தியசாலைகளுக்கு 500 முதல் 1000 கிலோ வொட் வலுகொண்ட மின பிறப்பாக்கிகளை வழங்க அமைசசரவை தீர்மானித்துள்ளது. சுகாதார அமைச்சர் மைத்திரபால சிறிசேனவின் ஆலோசனைக்கு ஏற்ப இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அவுஸ்திரிய அரசாங்கத்துடன் கடனுதவி ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட உள்ளது.

மட்டக்களப்பு போதனா வைததியசாலை, கொழும்பு வடக்கு மற்றும் தெற்கு போதனா வைத்தியசாலைகள், மஹரகமை புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலை, கரவனல்லை ஆதார வைத்தியசாலை, களுத்தறை மாவட்ட வைததியசாலை, கண்டி மற்றும் கராபிட்டிய போதனா வைத்தியசாலைகள் உட்பட 16 வைத்தியசாலைகளுக்கு இவை வழங்கப்பட உள்ளன

# கொழும்பில் 30000 வீடுகள்

கொழும்பில் வாழும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வசிப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் குறைந்தபட்சம் 30 ஆயிரம் வீடுகளை அமைக்க உத்தேசித்துள்ளதாக பதில் அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் லகஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி ராஜகிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் கிருமிநாசினி உட்கொண்டு சிகிச்சை பயனளிக்காமையினால் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. தனது தாயாருடன் ஏற்பட்ட பிணக்கினைத் தொடர்ந்து மேற்படி நபர் (வயது - 27) கிருமி நாசினியை உட்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் சிகிச்சை பயனளிக்காமையினால உயிரிழந்துள்ளார். மரண விசாரணையின் பின்னர் உறவினரகளிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் சிறு வியாபாரத் தொழில் மேற்கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (18)

# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விபரம்

நேற்று பகல் வெளியான 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையின் தமிழ்மொழி மூலமாக மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகள் பின்வருமாறு

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை - 153. யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு - 151. மன்னார், பொலநறுவை - 150. நுவரெலியா, அம்பாந்தோட்டை, பதுளை - 149. இரத்தினபுரி, அனுராதபுரம், முல்லைத்தீவு - 148. கிளிநொச்சி - 147. புத்தளம், வவுனியா - 150. மொனராகலை - 145

# கோண்டாவிலில் கைதாகிய மர்ம மனிதன் மனநோயாளியா?
## மருத்துவ அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

கோண்டாவிலப் பகுதியில் மர்ம மனிதன் என்று கூறி கைதுசெய்யப்பட்டவர் மன நோயாளியா என்பதை அறிய யாழ். நீதிமன்றம் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கோண்டாவில்ப் பகுதியில் வைத்து மர்ம மனிதன் என சந்தேகத்தில் கைதான இரத்தினபுரியைச் சேர்ந்த இளைஞனை யாழ மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக்கும் படியும், அத்துடன் அவருடைய முழுமையான மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மனநோயாளி என சந்தேகிக்கப்படுவதனால் அவரை மனநோய் வைத்தியப் பரிசோதனைக்கு அனுமதிக்குமாறும் கடந்த முதலாம் திகதி நீதவான் உத்தரவிட்டிருந்தார்.


தற்போது தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த நபரிற்கு தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருதோடு, நேற்றைய தினமும் சிகிச்சையளிக்கப்படுவதால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தமுடியவில்லை என பொலிஸார் வழங்கிய அறிக்கையினை அடுத்தே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்திற்கு குறித்த நபரது தாய், மற்றும் மாமனாரும் சமூகமளித்திருந்தனர். சந்தேக நபரின் தாயாரான வெல்லத்துரங்கே நாலனி காந்தியிடம் இதுபற்றிக் கேட்டபோது, தனது மகன் மாமனாருடன் கே.கே.எஸ். வீதி திருத்த வேலைக்காக வந்திருந்ததாகவும் அவர் மனநோயாளியாக இருக்கவில்லை எனவும் அன்றைய தினத்திற்கு பின்னர் தான் தனது மகன் மனநோயாளியாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ACCESS ENGINEERING.Ltd. இல் சந்தேகநபர் உதவியாளராக கடந்த மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி மதியம் ஒரு மணி வரை பணிபுரிந்தார் எனவும் தன்னுடனேயே வேலை செய்வதால் தனது மருமகன் பொழுது போக்காகவே சைக்கிளை எடுத்துக்கொண்டு போனதாகவும் பின்பு நடந்த விடயம் பற்றி தனக்கு தெரியாது என்றும் அவரின் மாமனார் K.P.விமலசேன தெரிவித்தார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கோண்டாவில்ப் பகுதியில் வைத்து மர்ம மனிதன் என சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி யாழ் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட குறித்த இளைஞனான தனஞ் செய பிரியதாத் பிரேமசிறியை பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைத்த பின்னர் நேற்று நீதின்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தார்.

# பணநோட்டுக்கள் கடத்தல் சிக்கிக்கொண்டார் சூத்திரதாரி



கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக சிங்கப்பூருக்கு கடத்த முற்பட்ட 8 கோடியே 17 லடசத்து 68000 ரூபா பெறுமதியான வெளிநாட்டு பண நோட்டுக்களை விமான நிலைய சுங்கப் பிரிவினர நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 1.10 இற்கு புறப்பட்டுச் செல்வதற்காக வந்த நபரிடம் இருந்தே மேற்படி வெளிநாட்டு பண நோட்டுக்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றினர்.

சுங்கத் திணைக்களத்தின் வரலாற்றில் இதுவே முதற் தடவையாக இவ்வாறு பெருந்தொகையான வெளிநாட்டு பண நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்தார். அம்பாந்தோட்டையைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு பண நோட்டுக்களை கடத்த முற்பட்டதாகவும் இதற்கு முன்னர் இவர் மூன்று தடவைகள் வெளிநாட்டு கரண்சி நோட்டுக்களை கடத்தியுள்ளதாகவும் மாலி பியசேன தெரிவித்தார்.

# கல்லூரி வளாகத்தில் எலும்புக் கூடுகள்



திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலையில் நீர்த் தாங்கி அமைப்பதற்காக குழி தோண்டியபோதே இவ் எழும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நீர்த்தாங்கிக்காக குழி தோண்டிய ஊழியர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்குசென்ற பொலிஸார், மற்றும் திருகோணமலை நீதிமன்ற நீதவான் யூ.எல்.ஏ.அஸ்ஹர், திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.டி.பதுகே ஆகியோர் எலும்புக்கூடுகளை பார்வையிட்டனர். இது கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் புதைக்கபபட்ட சடலங்களின் எலும்புக்கூடு என தெரிவித்த சட்ட வைத்திய அதிகாரி எஸ்.டி.பதுகே இவ் எழும்புக் கூடுகளை மேலதிக ஆய்வுக்காக பேராதெனிய வைத்தியசாலைக்கு அனுப்புவதாக தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளை திருகோணமலைத் துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடப்புத்தகம் விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த வருடத்துக்கான பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கு மாணவர்களுக்கு வழங்கவென 437 வகையான பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அவை சுமார் 41 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படடடுள்ளன. இதற்கென 3350 மில்லியன் ரூபா செலவில் 340 இலட்சம் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

# சுற்றுச் சூழல் பாதிப்பு வீதியமைப்பு நிறுத்தம்



சிங்கராஜா மழைக்காட்டுக்கு அருகாக நிர்மாணிக்கப்படவிருந்த சர்ச்சைக்குரிய வீதியமைப்புத் திட்டம் ஒன்றை தாம் இடைநிறுத்தியுள்ளதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தென்னிலங்கையில் ஒரு காலத்தில் மிகப்பெரிய மழைக்காடாகத் திகழ்ந்த இந்த சிங்கராஜா காட்டுக்கு அருகாக அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த இந்த வீதி நிர்மாணப்பணிகள் குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடுமையான எச்சரிக்கையை விடுத்திருந்தனர். ஆனாலும் உள்ளூர் மக்களுக்கு இந்த வீதி உதவும் என்று குறிப்பிட்டு வீதி அபிவிருத்தித் திட்டத்தை அரசியல்வாதிகள் ஊக்குவித்து வருகின்றனர்.

ஆனால், அந்த வீதிக்காக பெருமளவு காடு அழிக்கப்பட நேரும் என்றும், அது காடுகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற சர்வதேச பரிந்துரைகளுக்கு முரணானது என்றும் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட சிங்கராஜா காட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்த விளக்கமான அறிக்கை ஒன்றை ஐநாவின் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ அமைப்பு இலங்கை அரசாங்கத்திடம் கேட்டு சில நாட்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.